# சுபீட்சம்

SUPEEDSAM e-PAPER
www.Supeedsam.com

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

09 புதன்கிழமை செப்டெம்பர் 2026 | 09 Wednesday September 2026 | Switzerland Edition



S TRAVEL
உங்கள் கனவுப் பயணம்...
எங்களுடன் இனிதாக ஆரம்பிக்கட்டும்!
S Travel GmbH
Luisenstrasse 21, 8005 Zürich, Switzerland
044 419 91 00
www.stravel.ch
info@stravel.ch


# சுவிட்சர்லாந்து மீது ரஷ்யா தாக்குதல் அபாயம்

## ராணுவத் தலைவர் எச்சரிக்கை




சுவிட்சர்லாந்தின் முக்கியமான உள்கட்டமைப்புகள் மீது ரஷ்யா தாக்குதல் நடத்தக்கூடிய அபாயத்தை புறக்கணிக்க முடியாது என Swiss Army தலைவர் Benedikt Roos எச்சரித்துள்ளார்.

செய்தியை தொடர்ந்து வாசிக்க... CLICK HERE

## பொலிஸாருக்கே அபராதம் விதித்த குழந்தைகள்!

CHF 4- ஐ சிரித்தபடியே செலுத்திய Thurgau பொலிஸார் - Facebook-ல் வைரல்

செய்தியை தொடர்ந்து வாசிக்க... CLICK HERE

## பணக்கார வெளிநாட்டவர்களுக்கு சுவிட்சர்லாந்தில் தனி வரி முறை!

வருமானம், சொத்தை மட்டும் பார்க்காமல் வாழ்க்கைச் செலவை அடிப்படையாகக் கொண்ட சிறப்பு வரிவிதிப்பு - Valais முதலிடம்

சுவிட்சர்லாந்தில் வசிக்கும் குறிப்பிட்ட செல்வந்த வெளி நாட்டவர்களுக்கு, சாதாரண வருமானம் மற்றும் சொத்து அடிப்படையிலான வரிவிதிப்பிலிருந்து வேறுபட்ட சிறப்பு வரி முறை நடைமுறையில் உள்ளது.

செய்தியை தொடர்ந்து வாசிக்க... CLICK HERE

## Switzerland-க்கு இன்னும் மழை போதவில்லை வழக்கத்தைவிட இருமடங்கு மழை தேவை!

2026-ல் Switzerland கடுமையான மழைப்பற்றாக்குறையை சந்தித்துள்ளது. SRF Meteo வானிலை நிபுணர் Gaudenz Flury கூறுவதன்படி, ஆண்டு சராசரி மழையளவை எட்ட வேண்டுமெனில், இப்போது முதல் ஆண்டு இறுதிவரை

செய்தியை தொடர்ந்து வாசிக்க... CLICK HERE

## Switzerland-ல் வேலையின்மை அதிகரிப்பு; இளைஞர்கள் கடுமையாகப் பாதிப்பு

Switzerland-ல் ஆகஸ்ட் 2026 இறுதியில் வேலையற்றவர்களின் எண்ணிக்கை 141,544 ஆக உயர்ந்துள்ளது. இது ஜூலை மாதத்தைவிட 2,268 பேர் அதிகமாகும்.

தேசிய வேலையின்மை விகிதம் 3% ஆக நீடித்தாலும், கடந்த ஆண்டின் இதே காலத்துடன் ஒப்பிடுகையில் வேலையற்றவர்களின் எண்ணிக்கை 7.1% அதிகரித்துள்ளது.

செய்தியை தொடர்ந்து வாசிக்க... CLICK HERE


Click on the ads to view them in full

Sai Trader since 1991 GmbH
Food is our trade · World is our Market
Importeur fur frishe, exotische Gemuse | Fruchte & Fische

MULTI CONSULTING
Versicherung & Finanz

IMPORTAS
Cash & Carry

VTS Finance GmbH

SRI JEWELLERY

TAMINAA
AYURVEDIC WELLNESS

Pickeed




# சுவிட்சர்லாந்து மீது ரஷ்யா தாக்குதல் அபாயம்

## ராணுவத் தலைவர் எச்சரிக்கை

SRF-க்கு அளித்த பேட்டியில், தற்போதைய சர்வதேச சூழலை "சுதந்திர ஜனநாயக உலகுக்கும் சர்வாதிகார அமைப்புகளுக்கும் இடையிலான மோதல்" என Roos வர்ணித்துள்ளார். சுவிட்சர்லாந்து மேற்கத்திய உலகின் ஒரு பகுதியாக இருப்பதால், அது ஒரு சாத்தியமான இலக்காகவும் மாறக்கூடும் என அவர் கூறுகிறார்.

**Switzerland ஏன் முக்கிய இலக்காகலாம்?**

ஐரோப்பா முழுவதற்கும் முக்கியத்துவம் வாய்ந்த பல கட்டமைப்புகள் Switzerland-ல் உள்ளதாக Roos சுட்டிக்காட்டுகிறார். குறிப்பாக மின்சாரம் மற்றும் எரிவாயு விநியோக அமைப்புகள், Alps வழியாகச் செல்லும் முக்கிய போக்குவரத்து இணைப்புகள் மற்றும் பெரிய Data Centers ஆகியவை இதில் அடங்குகின்றன.

இதனால், "ஐரோப்பாவை நிலையற்றதாக்க விரும்புபவர்கள் Switzerland-ஐ இலக்காகக் கொள்ளக்கூடும்" என்பது அவரது எச்சரிக்கை.

**ஏவுகணை பாதுகாப்பு குறித்த கவலை**

Cruise missiles மற்றும் ballistic missiles போன்றவற்றை எதிர்கொள்ள Switzerland-ன் தற்போதைய வான் பாதுகாப்புத் திறன் போதுமானதாக இல்லை என்பதும் Army தலைவரின் முக்கிய கவலைகளில் ஒன்று.

மேலும், போர் அல்லது பெரிய நெருக்கடி Switzerland-ஐ நேரடியாகப் பாதிக்கக்கூடும் என்ற விழிப்புணர்வு பொதுமக்களிடையே இன்னும் போதுமான அளவில் இல்லை என்றும் Roos கருதுகிறார்.






சுவிட்சர்லாந்தின் Thurgau மாநிலத்தில் பொலிஸ் வாகனத்திற்கு குழந்தைகள் விளையாட்டாக CHF 4 அபராதம் விதித்த சம்பவம் சமூக வலைதளங்களில் பலரையும் சிரிக்க வைத்துள்ளது.

Donzhausen பகுதியைச் சேர்ந்த குழந்தைகள், Kantonspolizei Thurgau-வின் வாகனத்தில் கையால் எழுதப்பட்ட சிறிய அபராதக் குறிப்பை வைத்துச் சென்றுள்ளனர்.

அதில் குழந்தைகளுக்கே உரிய எழுத்துப் பிழைகளுடன், “Buse 4 Fr. wegen faltschparken – Liebe grüse, Kinder aus Donzhausen” என்று எழுதப்பட்டிருந்தது.

அதாவது,

“தவறாக வாகனத்தை நிறுத்தியதற்காக CHF 4 அபராதம் - அன்புடன், Donzhausen குழந்தைகள்.”

## பொலிஸார் என்ன செய்தார்கள்?

இதில் இன்னும் சுவாரஸ்யமான விடயம் என்னவென்றால், பொலிஸ் வாகனம் உண்மையில் தவறாக நிறுத்தப்பட்டிருக்கவில்லை. இருப்பினும் குழந்தைகளின் செயலைக் கண்டு மகிழ்ந்த அதிகாரிகள், அவர்கள் விதித்த CHF 4 ‘அபராதத்தை’ புறப்படுவதற்கு முன்பே உண்மையாகச் செலுத்தினர். குழந்தைகளின் செயல் தங்களுக்கு மகிழ்ச்சியான ஆச்சரியத்தை ஏற்படுத்தியதாகவும், அந்தக் குறிப்பை மிகவும் ரசித்ததாகவும் Thurgau பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## சமூக வலைதளத்தில் வைரல்

Kantonspolizei Thurgau செப்டம்பர் 4 அன்று இந்தக் குறிப்பை Facebook-ல் வெளியிட்டதைத் தொடர்ந்து பதிவு வைரலானது.

சுமார் 1,800 Likes மற்றும் 100க்கு அருகிலான கருத்துகள் கிடைத்துள்ளன.

பலர் குழந்தைகளின் செயலை “herzig” - மிகவும் அன்பானது, அழகானது என்று பாராட்டினர்.

ஒருவர் நகைச்சுவையாக,

“குழந்தைகளின் அபராதம் உங்களு டையதைவிட மலிவாக இருக்கிறதே!” என்றும் பதிவிட்டுள்ளார்.







# பணக்கார வெளிநாட்டவர்களுக்கு சுவிட்சர்லாந்தில் தனி வரி முறை!

## வருமானம், சொத்தை மட்டும் பார்க்காமல் வாழ்க்கைச் செலவை அடிப்படையாகக் கொண்ட சிறப்பு வரிவிதிப்பு - Valais முதலிடம்

"Lump-sum taxation" (Pauschalbesteuerung) என அழைக்கப்படும் இந்த முறையை தமிழில் "வாழ்க்கைச் செலவை அடிப்படையாகக் கொண்ட சிறப்பு வரிவிதிப்பு" என எளிமையாகக் குறிப்பிடலாம்.

### எப்படி கணக்கிடப்படுகிறது?

சாதாரண வரி செலுத்துவோருக்கு வருமானம் மற்றும் சொத்து உள்ளிட்டவற்றின் அடிப்படையில் வரி கணக்கிடப்படுகிறது.

ஆனால் இந்த சிறப்பு முறைக்குத் தகுதியுடைய வெளிநாட்டவர்களுக்கு, அவர்களதும் அவர்களைச் சார்ந்தவர்களதும் வருடாந்திர வாழ்க்கைச் செலவுகள் முக்கிய கணக்கீட்டு அடிப்படையாக எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

அதாவது, சுவிட்சர்லாந்தில் அவர்கள் எவ்வளவு உயர்ந்த வாழ்க்கைத் தரத்தில் வாழ்கிறார்கள், அதற்காக எவ்வளவு செலவிடுகிறார்கள் என்பதும் வரி நிர்ணயத்தில் முக்கியமானதாகிறது.

இருப்பினும் இதனை "பணக்காரர்களுக்கு குறைந்த வரி" அல்லது "வரி விலக்கு" என்று புரிந்துகொள்ளக்கூடாது. சட்டப்படி குறைந்தபட்ச வரி கணக்கீடுகளும் கட்டுப்பாட்டு கணக்கீடுகளும் உள்ளன.

### யாருக்கு கிடைக்கும்?

இந்த சிறப்பு வரி முறையைப் பெறுவதற்கு முக்கியமாக:

- Swiss குடியுரிமை இல்லாதவராக இருக்க வேண்டும்.
- சுவிட்சர்லாந்தில் முதன்முறையாக குடியேறுபவராக அல்லது குறைந்தது 10 ஆண்டுகள் வெளிநாட்டில் இருந்த பின்னர் மீண்டும் குடியேறுபவராக இருக்க வேண்டும்.
- சுவிட்சர்லாந்தில் ஊதியம் பெறும் தொழிலில் ஈடுபடக்கூடாது.

Swiss குடியுரிமை பெற்றவர்கள் இந்த சிறப்பு வரி முறையைப் பயன்படுத்த முடியாது.

### Valais முதலிடம்

இந்த வரி முறையின் கீழ் அதிகமான வெளிநாட்டவர்கள் வசிக்கும் மாநிலமாக Valais உள்ளது.

Valais - 841 பேர்

Vaud - 705 பேர்

Geneva - 505 பேர்

Valais-இல் இவர்களில் பலர் Zermatt, Verbier, Crans-Montana போன்ற விலையுயர்ந்த மலைச்

சுற்றுலாப் பகுதிகளில் வசிக்கின்றனர்.

2025ஆம் ஆண்டில் இந்த சிறப்பு வரி செலுத்துவோரிடமிருந்து Valais மாநிலத்திற்கு மட்டும் சுமார் CHF 122.5 மில்லியன் வரி வருவாய் கிடைத்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் வரி செலுத்துவதுடன், வீட்டு ஊழியர்களை வேலைக்கு அமர்த்துதல், பொருட்கள் மற்றும் சேவைகளை வாங்குதல், உள்ளூர் பொருளாதாரத்தில் அதிகளவு செலவிடுதல் போன்றவற்றின் மூலமும் பொருளாதாரத்திற்கு பங்களிக்கின்றனர்.

### Zürich-ல் கிடையாது

இந்த சிறப்பு வரி முறை சுவிட்சர்லாந்தின் அனைத்து மாநிலங்களிலும் நடைமுறையில் இல்லை. Zürich மக்கள் 2009ஆம் ஆண்டு நடைபெற்ற வாக்கெடுப்பில் இதனை நிராகரித்தனர். இதையடுத்து 2010 ஜனவரி முதல் Zürich மாநிலத்தில் இந்த முறை ரத்து செய்யப்பட்டது. Schaffhausen, Appenzell Ausserrhoden, Basel-Landschaft மற்றும் Basel-Stadt ஆகிய மாநிலங்களும் பின்னர் இதனை நீக்கின.

### EU/EFTA அல்லாத பணக்காரர்களும் பயன்பெற முடியுமா?

முடியும். ஆனால் EU/EFTA அல்லாத மூன்றாம் நாடுகளைச் சேர்ந்தவர்களுக்கு சுவிட்சர்லாந்தில் குடியேறுவதற்கான அனுமதி விதிகள் கூடுதலாகப் பொருந்தும்.

எனவே வரி முறைக்குத் தகுதி பெறுவது மற்றும் சுவிட்சர்லாந்தில் குடியிருப்பு அனுமதி பெறுவது இரண்டும் தனித்தனி சட்ட நடைமுறைகள் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

Lump-sum taxation என்பது பணக்கார வெளிநாட்டவர்களுக்கு “வரி இல்லை” என்று வழங்கப்படும் சலுகை அல்ல.

அவர்களின் வருமானம் மற்றும் சொத்துகளை மட்டும் வழக்கமான முறையில் கணக்கிடுவதற்குப் பதிலாக, அவர்களின் வாழ்க்கைச் செலவை முக்கிய அடிப்படையாகக் கொண்டு வரிக்குரிய தொகையை நிர்ணயிக்கும் ஒரு சிறப்பு வரிவிதிப்பு முறை ஆகும்.

சுவிட்சர்லாந்தின் மொத்த வரி செலுத்துவோருடன் ஒப்பிடுகையில், இந்த முறையில் வரி செலுத்துவோர் 0.1 சதவீதத்திற்கும் குறைவானவர்கள்.

# Switzerland-ல் வேலையின்மை அதிகரிப்பு;

## இளைஞர்கள் கடுமையாகப் பாதிப்பு

குறிப்பாக 15 முதல் 24 வயதுடைய இளைஞர்களின் வேலையின்மை ஒரே மாதத்தில் 19.4% உயர்ந்து 14,678 ஆகப் பதிவாகியுள்ளது. இளைஞர் வேலையின்மை விகிதம் 3.4% ஆக அதிகரித்துள்ளது.

அதேவேளை, RAV அலுவலகங்களில் பதிவுசெய்யப்பட்ட காலிப் பணியிடங்களின் எண்ணிக்கை 43,733 ஆகக் குறைந்துள்ளது.

எரிபொருள் விநியோக நெருக்கடி: அவசரக் கையிருப்பைத் திறக்கிறது Switzerland

Neuchâtel மாநிலத்தின் Cressier எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் தொழில்நுட்பக் கோளாறால் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதால், Petrol மற்றும் Diesel விநியோகத்தில் அழுத்தம் ஏற்பட்டுள்ளது.

இதனுடன் Rhine ஆற்றின் குறைந்த நீர்மட்டம் காரணமாக கப்பல் போக்குவரத்தும் கடுமையாகக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் எரிபொருள் இறக்குமதி பாதிக்கப்பட்டுள்ளது.

செப்டம்பர் 8 முதல் 20 வரை தேசிய அவசரக் கையிருப்பிலிருந்து அதிகபட்சமாக:

* 30,000 கனமீற்றர் Petrol
* 30,000 கனமீற்றர் Diesel

சந்தைக்கு விடுவிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இது மொத்த அவசரக் கையிருப்பில் 3%-க்கும் குறைவானது.

Cressier நிலையம் வழக்கமாக Switzerland-ன் எரிபொருள் தேவையில் 30%-க்கும் அதிகமான பகுதியை வழங்குகிறது. செப்டம்பர் நடுப்பகுதியில் உற்பத்தி மீண்டும் ஆரம்பமாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போதைக்கு பொதுமக்களுக்கான Petrol மற்றும் Diesel விநியோகம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக அரசு தெரிவித்துள்ளது. Heating Oil மற்றும் விமான எரிபொருளுக்கும் தட்டுப்பாடு இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.




# Switzerland-க்கு இன்னும் மழை போதவில்லை வழக்கத்தைவிட இருமடங்கு மழை தேவை!

வழக்கமாக பெய்யும் மழையைவிட சுமார் இருமடங்கு மழை பெய்ய வேண்டும்.

Mittelland பகுதியில் ஜனவரி முதல் இதுவரை சுமார் 500 mm மழை மட்டுமே பதிவாகியுள்ளது.

வழக்கமான முழு ஆண்டு அளவு சுமார் 1,100 mm என்பதால், இன்னும் சுமார் 600 mm தேவைப்படுகிறது.

புதன்கிழமை Switzerland-ஐ கடக்கும் குளிர் முனை காரணமாக வெப்பநிலை குறைந்து, ஆல்ப்ஸ் மலைகளின் வடபகுதியில் சுமார் 10 mm,

தெற்கில் 20-30 mm வரை மழை பெய்யலாம். ஆனால் இந்த மழை தற்போதைய வறட்சிப் பற்றாக்குறையை ஈடுசெய்ய போதாது.

குறிப்பாக 2026 ஏப்ரல் முதல் ஜூலை வரை, 1901-க்குப் பின்னர் பதிவான மிக வறண்ட மற்றும் வெப்பமான காலப்பகுதியாக இருந்ததாக செய்தி குறிப்பிடுகிறது. நாடு முழுவதும் வழக்கமான மழையின் 54% மட்டுமே பெய்தது; Jura பகுதியில் 45%, Mittelland பகுதியில் 47% மட்டுமே பதிவானது.

நீண்டகால முன்னறிவிப்பின்படி செப்டம்பர் தொடர்ந்து வறண்டதாகவும், அக்டோபர் சாதாரணமாகவும், நவம்பர்-டிசம்பர் வழக்கத்தைவிட அதிக மழையுடனும் இருக்கக்கூடும் என Flury கூறுகிறார்.




# 100 ஆண்டுகளில் இல்லாத சரிவு - Switzerland-ல் உருளைக்கிழங்கு அறுவடை 20% குறைந்தது; விலை உயர்வு அபாயம்!

2026 கோடைக்காலத்தில் நிலவிய கடும் வெப்பம் மற்றும் வறட்சி காரணமாக, நாட்டின் உருளைக்கிழங்கு உற்பத்தி வரலாறு காணாத அளவுக்கு சரிந்துள்ளது. Swisspatat தகவலின்படி, கடந்த 100 ஆண்டுகளில் பதிவான மிகக் குறைந்த கோடைக்கால உருளைக்கிழங்கு அறுவடை இதுவாகும்.

### அறுவடை 20% சரிவு

இந்த ஆண்டு Switzerland-ல் மொத்தம் சுமார் 333,000 டன் உருளைக்கிழங்கு அறுவடை செய்யப்பட்டுள்ளது. இது கடந்த ஐந்து ஆண்டுகளின் சராசரியைவிட 20% குறைவாகும்.

ஒரு ஹெக்டேருக்கு கிடைத்த விளைச்சல் 29.4 டன் மட்டுமே. இது 60 ஆண்டுகளுக்கும் மேலான காலத்தில் பதிவான மிகக் குறைந்த விளைச்சல் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

### கடும் வெப்பம் - வறட்சி

இந்த சரிவுக்கு 2026 கோடையில் ஏற்பட்ட அதிக வெப்பநிலையும் நீடித்த வறட்சியும் முக்கிய காரணங்களாகக் கூறப்படுகின்றன.

உருளைக்கிழங்கு பயிரிடப்படும் நிலப்பரப்பும் பல ஆண்டுகளாக பெருமளவில் குறைந்துள்ளது. 1944-ல் சுமார் 90,000 ஹெக்டேர் நிலத்தில் உருளைக்கிழங்கு பயிரிடப்பட்ட நிலையில், 2026-ல் அது சுமார் 11,000 ஹெக்டேராக குறைந்துள்ளது.

எதிர்காலத்தில் இதுபோன்ற பாதிப்புகளைக் குறைக்க செயற்கை நீர்ப்பாசன கட்டமைப்புகளை விரிவுபடுத்த வேண்டும் என Swisspatat வலியுறுத்தியுள்ளது.

### 130,000 டன் இறக்குமதி

இருப்பினும், வரும் மாதங்களில் Switzerland-ல் உருளைக்கிழங்கு முற்றிலும் தட்டுப்படும் நிலை ஏற்படாது என Swisspatat CEO Christian Bucher நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

உள்நாட்டு உற்பத்திக் குறைவை ஈடுசெய்ய சுமார் 130,000 டன் உருளைக்கிழங்கு வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படவுள்ளது.

இதனால் Switzerland-ன் உருளைக்கிழங்கு தன்னிறைவு விகிதம் வழக்கமான 80%-லிருந்து சுமார் 70-75% ஆகக் குறையலாம்.

### நுகர்வோருக்கு என்ன தாக்கம்?

பெரிய அளவிலான தட்டுப்பாடு எதிர்பார்க்கப்படாவிட்டாலும், இந்த இலையுதிர் மற்றும் குளிர்காலத்தில் கடைகளில் வழக்கத்தைவிட சிறிய உருளைக்கிழங்குகள் அதிகமாகக் காணப்படலாம்.

அத்துடன், குறைந்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் அதிகரிக்கும் இறக்குமதி தேவையால் உருளைக்கிழங்கு மற்றும் அதனை அடிப்படையாகக் கொண்ட சில உணவுப் பொருட்களின் விலைகளில் உயர்வு ஏற்படக்கூடும்




# சுவிஸில் தொடரும் வேலைக் குறைப்புகள்!

## பெரிய நிறுவனங்களில் ஆயிரக்கணக்கான பணியிடங்கள் பாதிப்பு - 2027ல் நிலைமை மேம்படுமா?

சுவிட்சர்லாந்தில் வேலையின்மை விகிதம் சுமார் 3% என்ற குறைந்த மட்டத்தில் தொடர்ந்தாலும், நாட்டின் பல முக்கிய நிறுவனங்களில் பணியிடக் குறைப்புகள் தொடர்ந்து அறிவிக்கப்பட்டு வருகின்றன.

### 2025 முதல் அதிகரித்த வேலை இழப்புகள்

2025ஆம் ஆண்டில் ஜெனீவாவைத் தளமாகக் கொண்ட ஐ.நா. மற்றும் சர்வதேச அமைப்புகளில் பெருமளவு வேலைக் குறைப்புகள் ஆரம்பமானது. அமெரிக்க நிதியுதவியில் ஏற்பட்ட மாற்றங்களால் ஆயிரக்கணக்கான பணியிடங்கள் பாதிக்கப்பட்டன.

அதன் பின்னர் தனியார் நிறுவனங்களிலும் மறுசீரமைப்பு மற்றும் செலவுக் குறைப்பு நடவடிக்கைகள் தீவிரமடைந்துள்ளன.

### எந்த நிறுவனத்தில் எத்தனை வேலைகள்?

UBS - சுவிட்சர்லாந்தில் ஏற்கனவே சுமார் 3,000 வேலைகள் குறைக்கப்பட்டுள்ளன.

Helvetia Baloise - அடுத்த மூன்று ஆண்டுகளில் 2,300 பணியிடங்கள் வரை குறைக்கப்படலாம்.

Swiss Broadcasting Corporation (SRG SSR) - அடுத்த மூன்று ஆண்டுகளில் 900 பணியிடங்களை குறைக்கத் திட்டம்.

Swiss Life - 2028 இறுதிக்குள் சுமார் 600 பணியிடங்கள் குறைக்கப்படவுள்ளன. அவற்றில் சுமார் 100 இந்த ஆண்டிலேயே பாதிக்கப்படலாம்.

Novartis - 2027 இறுதிக்குள் சுவிட்சர்லாந்தில் 550 வேலைகள் குறைக்கப்படவுள்ளன.

Sunrise - இந்த ஆண்டு 190 பணியிடங்கள் குறைப்பு.

Raiffeisen - இந்த ஆண்டு 180 பணியிடங்கள் வரை குறைக்கத் திட்டம்.

Skyguide - இந்த ஆண்டு முதல் அடுத்த ஆண்டு வரையான காலத்தில் 50 பணியிடங்கள் குறைக்கப்படவுள்ளன.

### உற்பத்தித் துறைக்கும் பாதிப்பு

சுவிஸ் தொழில்துறையை பிரதிநிதித்துவப்படுத்தும் Swissmem அமைப்பின் தலைவர் Martin Hirzel தெரிவித்த தகவலின்படி, 2025ஆம் ஆண்டில் உற்பத்தித் துறையில் மட்டும் சுமார் 6,600 வேலைகள் இழக்கப்பட்டுள்ளன. உலகப் பொருளாதார மாற்றங்கள் மற்றும் தொழிற்துறை நிறுவனங்கள் எதிர்கொள்ளும் அழுத்தங்கள் இதற்கு முக்கிய காரணங்களாகக் குறிப்பிடப்படுகின்றன.

### அடுத்த ஆண்டு நம்பிக்கை இருக்கிறதா?

தற்போதைய சவால்கள் நிரந்தரமானவை அல்ல என பொருளாதார நிபுணர்கள் கருதுகின்றனர்.

பொருளாதாரப் பேராசிரியர் Michael Siegenthaler, தற்போதைய நெருக்கடியிலிருந்து முழுமையாக வெளிவர இன்னும் சுமார் ஆறு மாதங்கள் தேவைப்படலாம் என்றும், அதன் பின்னர் சுவிஸ் வேலைவாய்ப்புச் சந்தை மேம்பட வாய்ப்புள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

### ஒரே பார்வையில்

வேலையின்மை: சுமார் 3%
2025 உற்பத்தித்துறை வேலை இழப்பு: 6,600
Swiss Life: 600 வரை
Novartis: 550
Sunrise: 190
Raiffeisen: 180
Skyguide: 50

சுவிட்சர்லாந்தின் ஒட்டுமொத்த வேலையின்மை விகிதம் ஐரோப்பாவின் பல நாடுகளைவிட குறைவாக இருந்தாலும், வங்கி, காப்புறுதி, மருந்து, தொலைத்தொடர்பு, ஊடகம் மற்றும் உற்பத்தித் துறைகளில் நடைபெறும் பணியிட மறுசீரமைப்புகள் கவனிக்க வேண்டிய ஒன்றாக மாறியுள்ளன.

2027ஆம் ஆண்டில் சுவிஸ் வேலைவாய்ப்புச் சந்தை மீண்டும் வலுப்பெறுமா என்பது அடுத்த சில மாதங்களின் பொருளாதார வளர்ச்சியைப் பொறுத்திருக்கும்.


Importas Cash & Carry

உலகின் சுவை உங்களுக்கு அருகில்!

ZÜRICH RETAIL SHOP
Importas Cash & Carry
Only 80 m from Letzipark
Baslerstrasse 102
8048 Zürich
Tel: +41 43 343 03 55
Fax: +41 43 343 03 56
Email: info@importas.ch
OPENING HOURS
Mon–Fri 10:00–20:00
Sat 09:00–18:00

BERN RETAIL SHOP
Importas Cash & Carry
Kranichweg 8
3074 Muri bei Bern
Tel: +41 31 951 24 44
Email: bern@importas.ch
OPENING HOURS
Mon–Fri 09:00–19:00
Sat 08:00–18:00

www.importas.ch




# செப்டம்பர் 27: சுவிஸில் முக்கிய வாக்கெடுப்பு

## நடுநிலைமை முதல் வரி, Assisted Dying, ஆர்ப்பாட்டங்கள் வரை மக்கள் தீர்ப்பு

சுவிட்சர்லாந்தில் 2026 செப்டம்பர் 27ஆம் தேதி நடைபெறும் மூன்றாவது சுற்று வாக்கெடுப்பில், தேசிய அளவில் இரண்டு முக்கிய முன்முயற்சிகளுடன் பல மாநிலங்களிலும் முக்கிய பிராந்திய விடயங்கள் மக்களின் தீர்ப்புக்கு வருகின்றன.

### 1. சுவிஸ் நடுநிலைமை - அரசியலமைப்பில் மேலும் உறுதிப்படுத்தப்படுமா?

"Neutrality Initiative" சுவிட்சர்லாந்தின் பாரம்பரிய நடுநிலைக் கொள்கையை அரசியலமைப்பில் மேலும் வலுவாகப் பதிய வேண்டும் எனக் கோருகிறது.




இதன்படி, சுவிட்சர்லாந்து NATO உள்ளிட்ட இராணுவக் கூட்டணிகளில் இணையக்கூடாது. ஆனால் சுவிட்சர்லாந்து நேரடியாகத் தாக்கப்பட்டால் விதிவிலக்கு ஏற்படலாம்.

இந்த முன்முயற்சியை Pro Schweiz முன்னெடுத்துள்ளது.

### 2. அனைவருக்கும் தரமான உணவு - "Food Initiative"

சுற்றுச்சூழல் செயற்பாட்டாளர் Franziska Herren முன்னெடுத்துள்ள Food Initiative, மக்களுக்கு எல்லா நேரங்களிலும் போதுமான அளவில் தரமான மற்றும் வாங்கக்கூடிய விலையில் உணவு கிடைப்பதை உறுதிப்படுத்த வேண்டும் எனக் கோருகிறது.

அத்துடன் சுவிஸ் விவசாயம் சுற்றுச்சூழல், உயிரினப் பல்வகைமை மற்றும் குடிநீர் பாதுகாப்பு தொடர்பான கூடுதல் தேவைகளையும்



பூர்த்தி செய்ய வேண்டும் என முன்மொழிகிறது.

தற்போதைய கருத்துக் கணிப்புகளின்படி, தேசிய அளவிலான இந்த இரண்டு முன்முயற்சிகளும் நிராகரிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

## மாநிலங்களில் என்ன வாக்கெடுப்பு?

### Vaud - தனிநபர் வரியை 12% குறைக்க வேண்டுமா?

Vaud மாநிலத்தில் தனிநபர்களின் மாநில வருமான மற்றும் சொத்து வரியை 12% குறைக்கும் முன்முயற்சி வாக்கெடுப்புக்கு வருகிறது.

ஆதரவாளர்கள் இது நடுத்தர வர்க்கத்தின் வாங்கும் சக்தியை அதிகரிக்கும் எனக் கூறுகின்றனர்.

ஆனால் மாநில அரசு இதை நிராகரிக்குமாறு பரிந்துரைக்கிறது. முன்முயற்சி ஏற்றுக்கொள்ளப்பட்டால் மாநிலத்திற்கு ஆண்டுதோறும் சுமார் CHF 272 மில்லியன் வருவாய் இழப்பு ஏற்படலாம் என்பது அதன் வாதம்.

### Geneva - பிரான்ஸ் போக்குவரத்துக்கு CHF 39.5 மில்லியன்?

Geneva எல்லையைத் தாண்டி பிரான்ஸுடன் இணைந்துள்ள போக்குவரத்து கட்டமைப்புகளை மேம்படுத்த CHF 39.5 மில்லியன் பங்களிப்பை வழங்க வேண்டுமா என்பதை மக்கள் தீர்மானிக்க உள்ளனர்.

இதன் மூலம் எல்லைப் பகுதிகளில் கார் போக்குவரத்தையும் நெரிசலையும் குறைக்க முடியும் என ஆதரவாளர்கள் கூறுகின்றனர்.

எதிர்ப்பாளர்கள், Geneva ஏற்கனவே பிரான்ஸுக்கு கணிசமான தொகையை வழங்குவதாகக் கூறி, இந்த மேலதிக செலவை எதிர்க்கின்றனர்.

### Zürich - தன்னிச்சையான உயிர்முடிவுக்கு உதவுதல் (Assisted Dying)" தொடர்பான முக்கிய தீர்ப்பு

Zürich மாநிலத்தில் தனியார் முதியோர் இல்லங்கள், nursing homes, மருத்துவமனைகள் மற்றும் rehabilitation clinics தங்களது வளாகங்களில் assisted dying-ஐ அனுமதிக்க வேண்டுமா என்பது வாக்கெடுப்புக்கு வருகிறது.

மனநல மருத்துவ நிலையங்கள் மற்றும் சிறைச்சாலைகளுக்கு விதிவிலக்கு முன்மொழியப்பட்டுள்ளது.

ஆதரவாளர்கள், ஒரு நிறுவனத்தின் மத அல்லது கொள்கை சார்ந்த நிலைப்பாடு காரணமாக நோயாளிகளின் அணுகல் மறுக்கப்படக்கூடாது என்கிறார்கள்.

எதிர்ப்பாளர்கள், மத மற்றும் நெறிமுறைக் காரணங்களால் assisted dying-ஐ ஏற்காத தனியார் நிறுவனங்கள் மற்றும் அவற்றின் பணியாளர்கள் மீது கட்டாயச் சுமை ஏற்படும் என வாதிடுகின்றனர்.

### Basel-Stadt - "Anti-Chaos Initiative"

அனுமதியற்ற அல்லது சட்டவிரோத ஆர்ப்பாட்டங்களைத் தடுப்பதுடன், சொத்துச் சேதம் மற்றும் பொலிஸ் நடவடிக்கைகளுக்கான செலவுகளுக்கு ஏற்பாட்டாளர்கள் மற்றும் பங்கேற்பாளர்களை நிதிப் பொறுப்பேற்கச் செய்யும் முன்முயற்சி வாக்கெடுப்புக்கு வருகிறது.

ஆதரவாளர்கள் இது பொதுப் பாதுகாப்பையும் வணிகங்களையும் குடியிருப்பாளர்களையும் பாதுகாக்கும் என்கிறார்கள்.

எதிர்ப்பாளர்கள் இதனால் கருத்துச் சுதந்திரம் மற்றும் ஒன்றுகூடும் உரிமை அளவுக்கு மீறிக் கட்டுப்படுத்தப்படலாம் என எச்சரிக்கின்றனர்.

செப்டம்பர் 27 வாக்கெடுப்பு தேசிய அரசியலை மட்டும் பற்றியது அல்ல. வரி, சுகாதாரத் தன்னாட்சி, எல்லைத் தாண்டிய போக்குவரத்து, ஆர்ப்பாட்ட உரிமை என மக்களின் அன்றாட வாழ்க்கையை நேரடியாகத் தொடும் பல விடயங்களிலும் தீர்ப்பு வழங்கப்படவுள்ளது


Sj
சிறி ஜுவல்லரி
உங்கள் ரசனைக்கேற்ப புதிய
தங்க நகைகளை வாங்கவும்
புதிய டிசைன்களில் ஆபரணங்களை
செய்து கொள்ளவும், பழைய
தங்கங்களை உருக்கி, புதிய
தங்க நகைகள் செய்து கொள்ளவும்,
விரைவாக திருத்த வேலைகளும்
செய்தும் தரப்படும்.
நகைத்தொழிலில் நீண்ட
காலம் அனுபவம் பெற்ற
நாங்கள் தாலிக்கு பொன்
உருக்கி வைரதாலிக்கொடி
செய்து தருகிறோம்.
வைர தாலி கொடி. மோதிரம்,
வளையல், பெயர் பெண்டன்
மற்றும் அனைத்து நகைகளும்
செய்து தரப்படும்.
Sj SRI JEWELLERY
Mattengasse 17, 8005 Zurich
043 366 80 09
info@srijewellery.ch
079 898 51 01




# சுவிஸில் விலை ஏறும் பொருட்கள்!




2026 கோடைக்காலத்தில் சுவிட்சர்லாந்தை தாக்கிய வரலாறு காணாத வெப்பம் மற்றும் நீண்ட வறட்சி, தற்போது மக்களின் அன்றாடச் செலவிலும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

1864 முதல் பதிவான மிக வெப்பமான கோடையாக 2026 அமைந்த நிலையில், சுவிஸ் விவசாயத் துறைக்கு சுமார் CHF 500 மில்லியன் இழப்பு ஏற்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

உருளைக்கிழங்கு விளைச்சல் சராசரியைவிட 20% குறைந்துள்ளதால் அதன் விலை உயர வாய்ப்புள்ளது; வைக்கோல் பற்றாக்குறை மற்றும் பால் உற்பத்திக் குறைவால் பால் மற்றும் பால் பொருட்களின் விலையும் அதிகரிக்கலாம். பழங்கள், காய்கறிகளும் விலை உயர்வை சந்திக்கக்கூடும்.

இதேவேளை, வறட்சியால் Rhine நதியின் நீர்மட்டம் குறைந்ததால் எரிபொருள் போக்குவரத்து பாதிக்கப்பட்டு பெட்ரோல் விலை அதிகரித்துள்ளதுடன், வீடுகளை சூடாக்கப் பயன்படுத்தப்படும் Heating Oil கடந்த ஆண்டைவிட 30%க்கும் அதிகமாக விலை உயர்ந்துள்ளது.


rib
ROMANDA IMMO
BUCHHALTUNG GMBH
உங்கள் கணக்குகள் – எங்கள் பொறுப்பு!
சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான நம்பகமான மற்றும் தொழில்முறை கணக்கியல் சேவைகள்.
கணக்குப் பதிவு – Buchhaltung
வருடாந்த கணக்கு முடிப்பு – Jahresabschluss
MWST / VAT கணக்கீடு
சம்பள கணக்கீடு – Lohnbuchhaltung
Quellensteuer
நிறுவன ஆரம்பம் மற்றும் நிர்வாக ஆலோசனை
வணிகம் மற்றும் நிதி தொடர்பான ஆலோசனைகள்
துல்லியம் • நம்பிக்கை • தனிப்பட்ட சேவை
உங்கள் வியாபார வெற்றிப் பயணத்தில் நம்பிக்கையான துணையாக...
ROMANDA IMMO
BUCHHALTUNG GMBH
Tovilistrasse 1
6006 Luzern
079 486 59 04
info@ribgmbh.ch
www.ribgmbh.ch


நல்லூரின் இதயத்தில் உலகத் தரச் சொகுசு அனுபவம்
“WORLD-CLASS
LUXURY
EXPERIENCE
IN THE HEART OF
NALLUR”
SPECIAL
OFFER
10% OFF
Exclusive Offer
Valid Through
31 DECEMBER 2026
Use Promo Code:
CH2026
Suisse
RESIDENCY
SWISS COMFORT, JAFFNA SOUL.
booking@suisseresidency.lk
+94 21 221 08 88
www.suisseresidency.lk
+94 77 877 90 00

ஐங்கரன் விக்கினேஸ்வரா



# ஐஸ்லாந்து மக்களின் உறுதியான தீர்ப்பு!

## ஐரோப்பிய ஒன்றியத்துடன் இணைய மறுப்பு

ஐரோப்பிய அரசியலில் கடந்த சில நாட்களில் முக்கிய கவனத்தை ஈர்த்துள்ள நிகழ்வு, வட அட்லாண்டிக் கடலில் அமைந்துள்ள சிறிய நாடான ஐஸ்லாந்தில் நடைபெற்ற ஐரோப்பிய ஒன்றிய (EU) தொடர்பான மக்கள் வாக்கெடுப்பு ஆகும். 2026 ஆகஸ்ட் 29 அன்று நடைபெற்ற இந்த வாக்கெடுப்பில், ஐரோப்பிய ஒன்றியத்தில் சேர்வதற்கான பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு ஐஸ்லாந்து மக்கள் குறுகிய பெரும்பான்மையுடன் இல்லை எனத் தீர்ப்பளித்துள்ளனர். இறுதி முடிவில் 52.8% பேர் எதிராகவும், 47.2% பேர் ஆதரவாகவும் வாக்களித்தனர். வாக்குப்பதிவு வீதமும் 82.5% என்ற அளவுக்கு உயர்ந்திருந்தது.

இந்த வாக்கெடுப்பு ஐஸ்லாந்து உடனடியாக ஐரோப்பிய ஒன்றியத்தில் சேர வேண்டுமா, வேண்டாமா என்பதற்கான இறுதி வாக்கெடுப்பு அல்ல. மாறாக, ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைவது தொடர்பான பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிக்க வேண்டுமா என்பதுதான் கேள்வியாக இருந்தது. ஆம் என்ற முடிவு கிடைத்திருந்தால் பேச்சுவார்த்தைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டிருக்கும். பின்னர் உருவாகும் உறுப்பினர் ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்வதற்காக இன்னொரு வாக்கெடுப்பு தேவைப்பட்டிருக்கும்.

### வாக்கெடுப்பின் முடிவு

ஐஸ்லாந்தில் நடைபெற்ற ஐரோப்பிய ஒன்றிய மக்கள் வாக்கெடுப்பில் மொத்தமாக சுமார் 225,000 வாக்குகள் பதிவாகின. அவற்றில் 118,040 பேர் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிக்க வேண்டாம் எனவும், 105,399 பேர் ஆரம்பிக்க வேண்டும் எனவும் வாக்களித்துள்ளனர். வாக்குப்பதிவு வீதம் 82.5% ஆகும்.

இது மிகவும் குறுகிய வித்தியாசத்தில் கிடைத்த வெற்றியாகும். இல்லை தரப்பு வெறும் 5.6 சதவீதப் புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது. எனவே, ஐஸ்லாந்து மக்கள் ஐரோப்பிய ஒன்றியத்துக்கு முற்றிலும் எதிரானவர்கள்




என்று இந்த முடிவை எளிமையாகப் புரிந்துகொள்வது தவறாகும். உண்மையில், நாட்டின் தலைநகர் ரெய்க்யாவிக் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் ஆம் வாக்குகளுக்கு வலுவான ஆதரவு காணப்பட்டது. ஆனால் நாட்டின் பல கிராமப்புற மற்றும் கடலோரப் பகுதிகளில் இல்லை வாக்குகள் அதிகமாகப் பதிவாகின. குறிப்பாக மீன்பிடித் தொழிலுடன் நெருக்கமாகத் தொடர்புடைய பிராந்தியங்களில் ஐரோப்பிய ஒன்றிய உறுப்புரிமை குறித்த அச்சம் அதிகமாக இருந்தது.

ஐஸ்லாந்து ஒரு சிறிய நாடாக இருந்தாலும், அதன் பொருளாதாரத்திலும் தேசிய அடையாளத்திலும் மீன்பிடித் தொழில் மிக முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளது. ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைந்தால், ஐரோப்பிய ஒன்றியத்தின் பொதுவான மீன்பிடிக் கொள்கை (Common Fisheries Policy) தொடர்பான விதிமுறைகளுக்கு ஐஸ்லாந்து உட்பட வேண்டிய நிலை ஏற்படும். இதனால் தங்களது கடல் வளங்கள் மற்றும் மீன்பிடி ஒதுக்கீடுகள் மீது வெளிப்புற அதிகாரம் அதிகரிக்கக்கூடும் என்று இல்லை தரப்பு அச்சம் தெரிவித்தது.

ஐஸ்லாந்தின் வரலாற்றைப் பார்க்கும்போது இந்த அச்சம் புரிந்து கொள்ளத்தக்கது. நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் கடல் வளங்களும் மீன்பிடித் தொழிலும் முக்கிய பங்கு வகித்துள்ளன. எனவே, எங்கள் கடல் வளங்கள் மீதான இறுதி அதிகாரம் ஐஸ்லாந்து மக்களிடமே இருக்க வேண்டும் என்ற தேசியவாத உணர்வு இந்த வாக்கெடுப்பில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படு த்தியுள்ளது.

ஆனால் ஐஸ்லாந்து ஐரோப்பாவிலிருந்து விலகிய நாடல்ல எனபது குறிப்பிடத்தக்கது.

## ஐஸ்லாந்தின் முக்கியத்துவம்:

ஐஸ்லாந்து ஐரோப்பிய ஒன்றியத்தின் உறுப்பினர் அல்ல. ஆனால் அது European Economic Area (EEA) அமைப்பின் மூலம் ஐரோப்பிய ஒன்றியத்தின் ஒற்றைச் சந்தையுடன் மிக நெருக்கமாக இணைந்துள்ளது. மேலும், அது செங்கன் (Schengen Area) உறுப்பினராக உள்ளது.

இதன் காரணமாக, ஐஸ்லாந்து ஏற்கனவே ஐரோப்பிய பொருளாதாரத்துடன் ஆழமான தொடர்பைக் கொண்டுள்ளது. பொருட்கள், சேவைகள், முதலீடு மற்றும் மக்களின் நகர்வு போன்ற துறைகளில் ஐரோப்பிய சந்தையுடன் நெருங்கிய உறவு உள்ளது. ஐரோப்பிய ஒன்றியத்தில் சேரவில்லை என்பதன் பொருள் ஐரோப்பாவிலிருந்து விலகுகிறது என்பதல்ல. மாறாக, ஐரோப்பிய ஒன்றியத்தின் முழுமையான அரசியல் உறுப்பினராகாமல், பொருளாதார ரீதியாக நெருக்கமான உறவைத் தொடர்வது என்ற தற்போதைய மாதிரியை ஐஸ்லாந்து மக்கள் விரும்பியுள்ளனர்.

2009 முதல் நீடிக்கும் ஐரோப்பிய ஒன்றிய விவகாரம் தொடர்பாக பல கருத்துகள் நிலவுகின்றன. அதேவேளை ஐஸ்லாந்தின் EU விவகாரம் புதியதல்ல. 2008ஆம் ஆண்டின் உலகளாவிய நிதி நெருக்கடியைத் தொடர்ந்து ஐஸ்லாந்தின் பொருளாதாரம் கடுமையாகப் பாதிக்கப்பட்டது. இதன் பின்னணியில் 2009ஆம் ஆண்டு அந்நாடு ஐரோப்பிய ஒன்றியத்தில் உறுப்பினராக விண்ணப்பித்தது. 2010ஆம் ஆண்டு இணைவு பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டன.

ஆனால் உறுப்புரிமையைச் சுற்றிய அரசியல் எதிர்ப்புகள் அதிகரித்தன. குறிப்பாக மீன்பிடி உரிமைகள், தேசிய இறையாண்மை மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் பொதுவான கொள்கைகளுக்கு உட்பட வேண்டிய நிலை ஆகியவை பெரும் விவாதங்களாக அமைந்தன. பின்னர் பேச்சுவார்த்தைகள் நிறுத்தப்பட்டன.

இப்போது 13 ஆண்டுகளுக்கும் மேலான இடைவெளிக்குப் பின்னர் அந்தப் பேச்சு



வார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கான வாய்ப்பு மக்களிடம் வைக்கப்பட்டது. ஆனால் மக்கள் அதை நிராகரித்துள்ளனர்.

## பொருளாதார - பாதுகாப்பு புவிசார் அரசியல்

அதேவேளை ஆம் தரப்பினர் முற்றிலும் பொருளாதார மற்றும் பாதுகாப்பு சார்ந்த காரணங்களை முன்வைத்தனர். ஐரோப்பிய ஒன்றிய உறுப்புரிமை கிடைத்தால், ஐஸ்லாந்துக்கு ஐரோப்பிய முடிவெடுக்கும் அமைப்புகளில் நேரடி அரசியல் பிரதிநிதித்துவம் கிடைக்கும். தற்போது ஐரோப்பிய ஒன்றியத்தின் ஒற்றைச் சந்தையில் பங்கேற்கும் அளவுக்கு நெருக்கமான உறவு இருந்தாலும், அந்தச் சந்தையின் முக்கிய அரசியல் முடிவுகளை எடுக்கும் மேசையில் ஐஸ்லாந்துக்கு முழுமையான உறுப்பினர் உரிமை இல்லை.

மேலும், உலகளாவிய பொருளாதார நிலையற்ற தன்மை, பணவீக்கம், வாழ்க்கைச் செலவு, உக்ரைன் போர் மற்றும் வட அட்லாண்டிக் பிராந்தியத்தில் அதிகரிக்கும் புவிசார் அரசியல் பதற்றம் ஆகியவை ஐஸ்லாந்து ஐரோப்பிய ஒன்றியத்துடன் இன்னும் நெருக்கமாக இணைவதற்கான காரணங்களாக ஆம் தரப்பினரால் முன்வைக்கப்பட்டன.

தற்போது இந்த வாக்கெடுப்பு பொருளாதார விவகாரம் மட்டுமல்ல. பாதுகாப்பு மற்றும் புவிசார் அரசியலும் இதில் முக்கிய பங்கு வகித்தன. ஐஸ்லாந்து NATO உறுப்பினராக உள்ளது. அந்நாட்டுக்கு நிரந்தரமான சொந்த இராணுவம் இல்லை. அமெரிக்காவுடன் 1951ஆம் ஆண்டிலிருந்து பாதுகாப்பு ஒப்பந்தமும் உள்ளது. வட அட்லாண்டிக் கடலில் ஐஸ்லாந்தின் புவியியல் அமைவு காரணமாக, ஐரோப்பா-வட அமெரிக்கா பாதுகாப்பு கட்டமைப்பில் அந்நாடு முக்கிய இடத்தை வகிக்கிறது.

குறிப்பாக கிரீன்லாந்து தொடர்பாக அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் முன்வைத்த கருத்துகள் மற்றும் ஆர்க்டிக் பிராந்தியத்தில் அதிகரிக்கும் அமெரிக்கா-ரஷ்யா-ஐரோப்பா போட்டி ஆகியவை ஐஸ்லாந்தின் பாதுகாப்பு விவாதத்தையும் பாதித்தன. ஐரோப்பிய ஒன்றியத்துடன் இன்னும் நெருக்கமாக இணைவது பாதுகாப்புக்கு உதவும் என்று ஆதரவாளர்கள் கூறுகின்றனர்.

ஆனால் இல்லை தரப்பு, NATO மற்றும் அமெரிக்க பாதுகாப்பு ஒப்பந்தம் உள்ளிட்ட தற்போதைய பாதுகாப்பு அமைப்புகள் போதுமானவை என்றும், EU உறுப்புரிமை அவசியமில்லை என்றும் வாதிட்டது.

## ஐஸ்லாந்து பிரதமர் நிலைப்பாடு

பிரதமர் Kristrún Frostadóttir தலைமையிலான அரசாங்கம் இந்த முடிவை மதிப்பதாக அறிவித்துள்ளது. தற்போதைய அரசாங்கத்தின் பதவிக்காலம் முடியும் 2028 வரை EU இணைவு பேச்சுவார்த்தைகளை மீண்டும் முன்னெடுக்கப் போவதில்லை என்பதும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம், ஐரோப்பிய ஒன்றிய உறுப்புரிமை விவகாரம் குறைந்தபட்சம் 2028 வரை ஐஸ்லாந்திய அரசியலின் முன்னுரிமைப் பட்டியலில் இருந்து விலகுகிறது. ஐஸ்லாந்தின் முடிவு ஐரோப்பிய ஒன்றியத்திற்கும் ஒரு அரசியல் செய்தி




யாகும். Brexitக்குப் பின்னர் ஐரோப்பிய ஒன்றியம் தனது விரிவாக்கத்தைத் தொடர விரும்புகிறது. ஐஸ்லாந்து போன்ற வளமான, ஜனநாயகமான, ஏற்கனவே ஐரோப்பிய பொருளாதார அமைப்புடன் நெருக்கமாக இணைந்துள்ள ஒரு நாட்டின் உறுப்புரிமை EUக்கு ஒப்பீட்டளவில் எளிதான விரிவாக்க வெற்றியாகக் கருதப்பட்டிருக்கலாம். ஆனால் இந்த வாக்கெடுப்பு, பொருளாதார நன்மைகள் மட்டுமே ஒரு நாட்டை ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைக்க போதுமானதாக இருக்காது என்பதை மீண்டும் காட்டியுள்ளது.

தேசிய இறையாண்மை, இயற்கை வளங்கள், மீன்பிடி உரிமைகள், தேசிய அடையாளம் மற்றும் வெளிநாட்டு கொள்கை ஆகியவை மக்களின் முடிவில் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. ஐஸ்லாந்தின் 52.8% இல்லை வாக்கு, ஐரோப்பிய ஒன்றியத்துக்கு எதிரான முழுமையான தீர்ப்பாகப் பார்க்கப்படக் கூடாது. ஐரோப்பாவுடன் நெருக்கமாக இருப்போம் ஆனால் முழுமையான அரசியல் உறுப்புரிமைக்காக எங்களது இறையாண்மை மற்றும் முக்கிய இயற்கை வளங்களின் கட்டுப்பாட்டை விட்டுக்கொடுக்க வேண்டாம் என்ற மனநிலையின் வெளிப்பாடாக இதைப் பார்க்கலாம்.

குறிப்பாக மீன்பிடி உரிமைகள், தேசிய இறையாண்மை மற்றும் தற்போதைய EEA உறவு ஆகியவை இல்லை தரப்பின் வெற்றிக்கு முக்கிய காரணிகளாக அமைந்துள்ளன. அதே நேரத்தில் 47.2% பேர் ஆம் என வாக்களித்திருப்பது, ஐஸ்லாந்து சமூகத்தில் EU உறுப்புரிமை குறித்த ஆதரவு இன்னும் கணிசமாக இருப்பதையும் காட்டுகிறது. எனவே, இந்த வாக்கெடுப்பை ஐஸ்லாந்து ஐரோப்பாவை நிராகரித்தது என்று கூறுவது சரியான விளக்கம் அல்ல. மாறாக, ஐஸ்லாந்து ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைவதற்கான பேச்சுவார்த்தையை இப்போது மீண்டும் தொடங்க வேண்டாம் என்று தீர்மானித்துள்ளது என்பதே துல்லியமான விளக்கம்.

2028க்குப் பின்னர் அரசியல் சூழல் மாறினால் இந்த விவகாரம் மீண்டும் எழலாம். ஆனால் தற்போதைய தீர்ப்பு ஒன்று தெளிவாகக் கூறுகிறது: ஐரோப்பிய ஒத்துழைப்பை ஏற்றுக்கொண்டாலும், தேசிய இறையாண்மை மற்றும் கடல் வளங்களின் மீதான கட்டுப்பாட்டை விட்டுக்கொடுப்பதில் ஐஸ்லாந்து மக்கள் இன்னும் மிகவும் எச்சரிக்கையாக உள்ளனர்.




TAMINAA
AYURVEDIC WELLNESS
Natürliche Schmerzlinderung ohne Medikamente gegen Stress,
Rückenschmerzen, Nackenschmerzen, Schlafprobleme
DISCOUNT 25% OFF
BEST PRICE TREATMENT
Krankenkasse anerkannt!
Rückenschmerzen/ Nackenschmerzen
Stress
Migräne/ Kopfschmerzen
Entspannung
Migränelindernde
Stressabbau
Nacken/Rückenschmerzen
Schlafqualität
Buchen Sie jetzt und erhalten Sie 25 % Rabatt für November! Nur für Sie!
Buchen Sie noch heute Ihren Termin!
+41 79 940 15 10
taminaa.ch
Zähringerstrasse 32 | 8001 Zürich
Krankenkasse anerkannt!
WIR KOMMEN AUCH ZU IHNEN NACH HAUSE, INS BÜRO ODER INS HOTEL
ZUHAUSE Hausbesuch
BÜRO Firmenbesuch
HOTEL Hotelbesuch
+41 79 940 15 10
taminaa.ch
Zähringerstrasse 32 8001 Zürich
TAMINAA – Ihre Gesundheit in besten Händen


சுபீட்சம்
நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே
பத்திரிகை
வேதாந்தி : 004178 6264375
supeedsam@gmail.com
வாரத்தில்ஒருமுறை உங்கள் கரங்களில் மின்னிதழாக...
சுபீட்சம் வாட்ஸ் ஆப் குழுவில் இணைய இங்கே தொடவும்....
CLICK HERE


VM Cars
9 SEATER VAN
FOR RENT
Perfect for families, friends & groups
VM Cars
9 SEATS
EXTRA LONG VERSION
AUTOMATIC
REAR PARKING SENSORS
PER DAY CHF
130.-
400 KM
PER DAY
UNLIMITED KM
ON REQUEST
WEEKLY RENTAL
WITH DISCOUNT
ON REQUEST
BOOK NOW
WhatsApp
+41 79 510 21 68
vmcars.ch@gmail.com
Instagram
VMCars.ch
Spreitenbach AG /
Dietikon ZH




# Migros பெயரில் மோசடி - பணத்தை இழந்த வாடிக்கையாளர்கள்!

CHF 49.90 மதிப்புள்ள இலவச Migros உணவுப் பெட்டி கிடைக்கும் எனக் கூறி போலி மின்னஞ்சல்கள் சுவிட்சர்லாந்தில் பரவி வருகின்றன. சிறிய delivery கட்டணம் செலுத்துமாறு கூறி தனிப்பட்ட மற்றும் கட்டணத் தகவல்களைப் பெறும் Phishing மோசடி இது என Migros எச்சரித்துள்ளது. சில வாடிக்கையாளர்கள் ஏற்கனவே பணத்தை இழந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### மக்கள் உடனடியாக செய்ய வேண்டியது

1. Link-ஐ அழுத்தாதீர்கள் - சந்தேகமான Migros மின்னஞ்சல் அல்லது SMS-ல் வரும் இணைப்புகளைத் திறக்க வேண்டாம்.

2. தகவல்களை வழங்காதீர்கள் - Credit/ Debit card, வங்கி மற்றும் தனிப்பட்ட தகவல்களைப் பதிவு செய்ய வேண்டாம்.

3. பதிலளிக்காமல் நீக்குங்கள் - அந்தச் செய்தியை மற்றவர்களுக்கு Forward செய்யவும் வேண்டாம்.

4. பணம் செலுத்திவிட்டீர்களா? - உடனடியாக உங்கள் வங்கி அல்லது Card Provider-ஐ தொடர்புகொள்ளுங்கள்.

5. பணம் இழந்திருந்தால் - சம்பவம் தொடர்பான ஆதாரங்களைச் சேமித்து பொலிஸில் புகார் அளியுங்கள்.

6. சந்தேகம் இருந்தால் - சலுகை உண்மையானதா என்பதை Migros-ன் அதிகாரப்பூர்வ சேனல்கள் வழியாக மட்டும் சரிபாருங்கள்


LAMELLE GLASS
& STORE SA
VITRERIE - MIROITERIE - STORES
சுவிஸின் ஒரே தமிழ்
கண்ணாடித் தொழிற்சாலை!
சுவிட்சர்லாந்து முழுவதும் சேவை
எந்த இடத்திலும், எந்த நேரத்திலும்!
உங்கள் வீட்டின் அழகையும்
பாதுகாப்பையும் அதிகரிக்க,
உயர்தர கண்ணாடிகளை நாமே
தயாரித்து நேரடியாகப்
பொருத்தித் தருகிறோம்.
BEST PRICE
BEST PRICE
BEST PRICE
எமது சேவைகள்:
• ஜன்னல் மற்றும் கதவு கண்ணாடிகள்
• குளியலறை கண்ணாடித் தடுப்புகள் (SHOWER GLASS)
• பால்கனி மற்றும் பாதுகாப்பு வேலி கண்ணாடிகள்
• சமையலறை அலங்காரக் கண்ணாடிகள்
சிறப்பம்சங்கள்:
• இலவச மதிப்பீடு (GRATIS OFFERTE) — உங்கள் இடத்திற்கே வந்து அளவீடு செய்வோம்.
• சொந்தத் தயாரிப்பு — மிகக் குறைந்த விலை, சிறந்த தரம்.
• நாடெங்கும் சேவை — ஜெனிவா உட்பட சுவிஸின் அனைத்துப் பகுதிகளுக்கும்.
உங்கள் தேவைகளை தமிழில் பேசி, தரமாகப் பெற்றிடுங்கள்!
VERNIER
48, Chemin Delay, 1214 Vernier
info@lamelle-glass.ch
GENÈVE
27, Rue du Grand-pré, 1202 Genève
info@lamelle-glass.ch
NYON
8, Rue de la Colombière, 1260 Nyon
nyon@lamelle-glass.ch
இலவச ஆலோசனைக்கு அழையுங்கள்:
PRABA +41 79 416 76 96 www.lamelle-glass.ch


DEPANNAGE URGENCE
7/24
022 782 08 88
LAMELLE GLASS
& STORE SA
VITRERIE - MIROITERIE - STORES
info@lamelle-glass.ch
www.lamelle-glass.ch - 48, Chemin Delay - 1214 Vernier



ZUVERLÄSSIG. SAUBER. PÜNKTLICH.
IHR PARTNER FÜR JEDE AUFGABE.
NOLIMIT ONE
GmbH
REINIGUNG.
TRANSPORT.
UMZUGSHILFE.
ALLES AUS EINER HAND –
FÜR PRIVAT UND GEWERBE.
REINIGUNG
Sauberkeit, auf die Sie sich verlassen können.
TRANSPORT
Sicher, schnell und zuverlässig ans Ziel.
UMZUGSHILFE
Wir unterstützen Sie beim Umzug – stressfrei und effizient.
ZUVERLÄSSIG
Termingerecht und vertrauensvoll
ERFAHRENES TEAM
5–10 motivierte Mitarbeitende
FLEXIBEL
Kurzfristig einsatzbereit
FAIRE PREISE
Top Qualität zu fairen Konditionen
WARUM NOLIMIT ONE?
Professionelle Arbeit & höchste Qualität
Moderne Ausrüstung & 2 Nutzfahrzeuge
Privatkunden, Firmen & Verwaltungen
Individuelle Lösungen für Ihren Bedarf
Termingerecht & zuverlässig
CRAFTER
MASTER
JETZT ANFRAGEN
Wir sind für Sie da!
Kostenlose Beratung.
078 222 2126
nolimitone26@gmail.com
Ostschweiz
Unterwegs für Sie in der Region
Jeder Auftrag wird mit Sorgfalt und Respekt ausgeführt
Nachhaltig
Umweltbewusst handeln für eine saubere Zukunft
No Limit One – wir machen den Unterschied.
www.nolimitone.ch




தமிழின் குரலாய்
அக்கினி fm
Akkini
CLICK HERE




# சுவிஸில் பாடசாலை ஒதுக்கீட்டில் புதிய முறை

## பெற்றோரிடையே விமர்சனம்

சுவிட்சர்லாந்தின் சில பகுதிகளில் குழந்தைகள் எந்தப் பள்ளிக்குச் செல்ல வேண்டும் என்பதை வீட்டு முகவரி அல்லது பள்ளிக்கான தூரம் மட்டும் தீர்மானிப்பதில்லை. சமூக மற்றும் மொழிப் பின்னணிகளும் தற்போது கருத்தில் கொள்ளப்படுகின்றன.

Zürich மாகாணத்தின் Uster நகரில் கடந்த இரண்டு ஆண்டுகளாக மாணவர்களைப் பள்ளிகளுக்கு ஒதுக்க கணினி அடிப்படையிலான Algorithm முறை பயன்படுத்தப்படுகிறது. பள்ளிக்கான தூரம், இடவசதி, மொழி மற்றும் சமூகச் சூழல் உள்ளிட்ட காரணிகள் இதில் கணக்கிடப்படுகின்றன.

இதன் மூலம் சமூக மற்றும் மொழி ரீதியாக சமநிலையான வகுப்புகளை உருவாக்க முடிவதாக Uster பள்ளி நிர்வாகம் கூறுகிறது. ஆனால் சில பெற்றோர், குழந்தைகளின் பள்ளிப்பாதை நீளமாவது மற்றும் நண்பர்கள் பிரிக்கப்படுவது குறித்து எதிர்ப்பு தெரிவிக்கின்றனர். Bern நகரிலும் சமூகக் கலவைக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. ஆனால் Nidau பகுதியில் வீட்டிற்கு அருகிலுள்ள பள்ளிக்கே தொடர்ந்து முன்னுரிமை வழங்கப்படுகிறது.

Uster-ன் இந்த புதிய முறை குழந்தைகளின் கல்வி வாய்ப்புகளை உண்மையில் மேம்படுத்துகிறதா என்பது தொடர்பாக ஆய்வு மேற்கொள்ளப்படவுள்ளது.

# 599 நாட்கள் காவலில் தாய், மாற்றுத் தந்தை!

## 5 ஆண்டுகளுக்குப் பின் “குற்றச்சாட்டுகளை நானே உருவாக்கினேன்” எனக் கூறிய மகள்




சூரிச் நீதித்துறையில் பரபரப்பை ஏற்படுத்திய வழக்கொன்றில், தனது 14 வயதில் தாய் மற்றும் மாற்றுத் தந்தை மீது முன்வைத்த வன்முறை மற்றும் பாலியல் துஷ்பிரயோகக் குற்றச்சாட்டுகள் உண்மையல்ல என தற்போது 19 வயதான இளம்பெண் தெரிவித்ததைத் தொடர்ந்து, அவர்களுக்கு எதிரான முந்தைய குற்றத்தீர்ப்பு ரத்து செய்யப்பட்டுள்ளது.

### என்ன நடந்தது?

14 வயதாக இருந்தபோது, தனது தாயும் மாற்றுத் தந்தையும் பல ஆண்டுகளாக தன்னைத் தாக்கியதாக சிறுமி குற்றஞ்சாட்டினார்.

மாற்றுத் தந்தை தன்னை பாலியல் ரீதியாகத் துஷ்பிரயோகம் செய்ததாகவும் அவர் தெரிவித்திருந்தார்.

இதையடுத்து இருவரும் கைது செய்யப்பட்டு தலா 599 நாட்கள் விசாரணை மற்றும் பாதுகாப்புக் காவலில் இருந்தனர்.

### நீதிமன்றம் வழங்கியிருந்த தண்டனை

மாற்றுத் தந்தைக்கு 50 மாத சிறைத்தண்டனையும், தாய்க்கு உடந்தையாக இருந்ததாக 47 மாத சிறைத்தண்டனையும் Zürich Obergericht வழங்கியிருந்தது.

### ஐந்து ஆண்டுகளுக்குப் பின் அதிர்ச்சித் திருப்பம்

தனது 19வது பிறந்தநாளுக்கு மறுநாள், இளம்பெண் Zürich Obergericht-ஐ தொலைபேசியில் தொடர்புகொண்டு, முன்பு தெரிவித்த குற்றச்சாட்டுகள் அனைத்தையும் தான் உருவாக்கிக் கூறியதாக தெரிவித்தார்.

அவரது புதிய வாக்குமூலம் குறித்து மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், குற்றச்சாட்டுகளைத் திரும்பப்பெறுமாறு அவர் மீது அழுத்தம் அல்லது கட்டாயம் செலுத்தப்பட்டதற்கான ஆதாரம் கிடைக்கவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து தாய் மற்றும் மாற்றுத் தந்தைக்கு எதிரான முந்தைய குற்றத்தீர்ப்பு ரத்து செய்யப்பட்டது.

### உளவியல் மதிப்பீடு மீதும் கேள்வி

சிறுமி 14 வயதில் விசாரிக்கப்பட்டபோது, அச்சுறுத்தும் உருவங்கள் மற்றும் தனக்குக் கட்டளையிடும் குரல்கள் குறித்து தெரிவித்ததாகவும் செய்திகள் கூறுகின்றன.

அந்த அறிகுறிகள் அப்போது எவ்வாறு மதிப்பிடப்பட்டன என்பது தொடர்பாக தற்போது உளவியல் நிபுணர்களின் அணுகுமுறை மீதும் கேள்விகள் எழுந்துள்ளன.


VTS
Finance GmbH
IMMOBILIEN • HYPOTHEKEN • FINANZIERUNGEN • VERSICHERUNGEN
IHRE ZIELE.
UNSERE LÖSUNGEN.
Kompetent, persönlich und zuverlässig – für Ihre finanzielle Zukunft.
IHRE ZUKUNFT IN GUTEN HÄNDEN
NEU
IMMOBILIEN
Ihr Partner rund um Immobilien
Kauf & Verkauf
Immobilienvermitttung
Bewertung
Beratung bei Wohn- und Renditeobjekten
HYPOTHEKEN & FINANZIERUNGEN
Individuelle Lösungen zu besten Konditionen
Hypotheken für Wohneigentum
Hypothekenablösungen & Aufstockungen
Bau- & Renovations-Finanzierungen
Firmenfinanzierungen
Privatkredite
VERSICHERUNGEN
Optimaler Schutz für Sie und Ihre Liebsten
Krankenversicherungen
Lebensversicherungen
Vorsorge 3a & 3b
Fahrzeugversicherungen
Hausrat- & Privathaflpflichtversicherungen
Gebäudeversicherungen
Firmen- & Geschäfts-versicherungen
KREDITE
Schnell, unkompliziert und diskret
CHF
Privatkredite
Konsumentenkredite
Firmenkredite
Liquiditätslösungen
PERSÖNLICHE BERATUNG
Individuell auf ihre Bedurnisse abgestistmmt.
KOMPETENZ & ERFAHRUNG
Jahrelange Erlahrung und fundiertes Inow-how.
ZUVERLÄSSIG & TRANSPARENT
Faire Lösungen und klare Kommunikation.
SICHERHEIT & VERTRAUEN
Ihre Zufniedheit is it unser oberstes Ziel.
WIR SCHAFFEN WERTE.
FÜR HEUTE UND MORGEN.
Ob Immobille, Hypothek, Finanzierung oder Versicherung – wir begleiten Sie auf ihrem Weg zu finanzieller Sicherheit und nachhaltigem Erfolg.
Ganzheitliche Beratung
Beste Konditionen
Schnelle Abwicklung
Langfristige Partnerschaft
RUFEN SIE UNS AN
078 920 58 58
Wir sind gerne für Sie da.
SCHREIBEN SIE UNS
info@vtsfinance.ch
Wir antworten schnell.
V.T.S. Finance GmbH
Gartenstadtstrasse 5
3098 Köniz
Ihr Vertrauen. Unsere Verantwortung. Gemeinsam in eine sichere Zukunft.




# Swiss Post-ல் 110 வேலைகள் குறைப்பு

## செலவுகளைக் கட்டுப்படுத்த புதிய நடவடிக்கை - வாடிக்கையாளர் சேவைகள் பாதிக்கப்படாது

Swiss Post செலவுகளைக் குறைத்து, பொதுச் சேவைகளின் நீண்டகால நிதி நிலைத்தன்மையை உறுதிப்படுத்தும் நோக்கில் அதிகபட்சம் 110 வேலைகளை குறைக்கவுள்ளதாக அறிவித்துள்ளது.

இந்த நடவடிக்கை முக்கியமாக Management மற்றும் Support பிரிவுகளில் பணிபுரிபவர்களை பாதிக்கும். வேலைக் குறைப்பு நடவடிக்கைகள் 2027 இறுதிக்குள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

### வாடிக்கையாளர்களுக்கு பாதிப்பு இல்லை

அஞ்சல் விநியோகம் மற்றும் வாடிக்கையாளர்களுடன் நேரடியாக தொடர்புடைய சேவைகள் இந்த வேலைக் குறைப்பால் பாதிக்கப்படாது என Swiss Post உறுதியளித்துள்ளது.

முடிந்தவரை நேரடி பணிநீக்கங்களைத் தவிர்த்து, இயற்கையான பணியாளர் வெளியேற்றம் மற்றும் முன்கூட்டிய ஓய்வு மூலம் பணியாளர் எண்ணிக்கையை குறைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

### கடிதங்களின் பயன்பாடு தொடர்ந்து குறைகிறது

2026 முதல் ஆறு மாதங்களில் கடிதங்களின் அளவு 5% குறைந்துள்ளது. கடந்த பத்து ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் இந்த வீழ்ச்சி 38% ஆக உள்ளது.

அதேவேளை Parcel வணிகம் மற்றும் PostFinance-ன் மேம்பட்ட செயல்திறன் காரணமாக Swiss Post-ன் செயல்பாட்டு இலாபம் (EBIT) CHF 118 மில்லியனிலிருந்து CHF 173 மில்லியனாக உயர்ந்துள்ளது.

# Winterthur-ல் 'போலி தொழிலாளர்கள்' கைவரிசை - மூவர் கைது; நகைகள், கைக்கடிகாரங்கள் மீட்பு




## Winterthur ZH-ல் நகைகள் மற்றும் கைக்கடிகாரங்கள் மீட்பு

Winterthur-ல் தொழிலாளர்கள் எனக் கூறி வீடுகளுக்குள் நுழைந்து திருடியதாக சந்தேகிக்கப்படும் மூவரை Zürich மாநில பொலிஸார் கைது செய்துள்ளனர்.

ஒருவர் வீட்டின் வெளியே கண்காணித்துக் கொண்டிருக்க, மற்றொருவர் கதவைத் தட்டி "மின்சாரத்தைச் சோதிக்க வந்த தொழிலாளர்" எனக் கூறி பல வீடுகளுக்குள் நுழைந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். அப்போது பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டதாக சந்தேகிக்கப்படுகிறது.

### பொலிஸில் சிக்கியது எப்படி?

சந்தேகத்திற்கிடமாகச் சென்ற வெளிமாநில இலக்கத் தகடு கொண்ட காரை பொலிஸார் கவனித்தனர். பின்னர் அருகிலுள்ள நகராட்சிப் பகுதியில் காரை நிறுத்தி அதிலிருந்த 23, 26 மற்றும் 29 வயதுடைய மூவரையும் கைது செய்தனர். அவர்கள் Romanian நாட்டவர்கள் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சோதனையில் பல கைக்கடிகாரங்கள் மற்றும் நகைகள் மீட்கப்பட்டன. மூவருக்கும் விசாரணைக் காவல் உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும் வேறு திருட்டுச் சம்பவங்களுடன் இவர்களுக்குத் தொடர்புள்ளதா என்பதும் விசாரிக்கப்படுகிறது.

### பொலிஸாரின் முக்கிய எச்சரிக்கை

மின்சாரச் சோதனை, Lift பழுதுபார்ப்பு அல்லது ஜன்னல் ஷட்டர் சோதனை போன்ற காரணங்களைக் கூறி அறிமுகமற்றவர்கள் வீட்டிற்குள் நுழைய முயற்சிக்கலாம். சந்தேகம் ஏற்பட்டால் அவர்களை உள்ளே அனுமதிக்காமல், சம்பந்தப்பட்ட நிறுவனத்திடம் நேரடியாக உறுதிப்படுத்துங்கள்; அவசர நிலையில் 117-ஐ அழைக்கலாம்




# Bern மாகாண நாடாளுமன்றத்தின் முக்கிய புதிய தீர்மானங்கள்

Bern மாகாணத்தின் Grosser Rat , 7 செப்டம்பர் 2026, முக்கியமான இரண்டு திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.

Grimsel அணை உயர்த்தும் திட்டம்: Grimselsee நீர்மட்டத்தை அதிகபட்சமாக 23 மீட்டர் உயர்த்துவதற்கான concession மாற்றத்திற்கு நாடாளுமன்றம் ஒருமனதாக ஒப்புதல் அளித்தது. Spitallamm மற்றும் Seeuferegg அணைகள் உயர்த்தப்படவுள்ளன. இதன்மூலம் குறிப்பாக குளிர்காலத்தில் பயன்படுத்தக்கூடிய கூடுதல் மின்சாரத்தை சேமிக்க முடியும்; இது 53,000-க்கும் அதிகமான குடும்பங்களின் மின்தேவைக்கு இணையான அளவு என அரசு தெரிவித்துள்ளது. சுற்றுச்சூழல் அமைப்புகளுடனான சமரசத் திட்டத்திற்கும் ஆதரவு கிடைத்தது.

Brienz வெள்ளப் பாதுகாப்புக்கு CHF 12.75 மில்லியன்: 2024-ஆம் ஆண்டு Milibach பகுதியில் ஏற்பட்ட கடுமையான வெள்ள சேதத்தைத் தொடர்ந்து, ஆற்றை குடியிருப்புப் பகுதியிலிருந்து மாற்றுவதற்கான திட்டமிடல் மற்றும் நிலம் வாங்குவதற்கு அதிகபட்சம் CHF 12.75 மில்லியன் கடனுதவியை Grosser Rat அங்கீகரித்துள்ளது. இறுதி கட்டுமானத் திட்டமும் முழுமையான செலவுக் கணக்கும் இன்னும் தயாராகாத நிலையிலேயே அவசரத் தேவையை கருத்தில் கொண்டு இந்த நிதி அனுமதிக்கப்பட்டுள்ளது.




# Luzern-ல் புதிய போக்குவரத்து நிதியமைப்பு நாடாளுமன்றம் ஆதரவு

Luzern மாகாணத்தில் சாலை கட்டமைப்பு மற்றும் பொதுப் போக்குவரத்துக்கான நிதியளிப்பு முறையை மாற்றும் திட்டத்திற்கு Kantonsrat 113-1 வாக்குகளால் ஒப்புதல் அளித்துள்ளது; ஒருவர் வாக்களிப்பில் பங்கேற்கவில்லை.

மக்கள்தொகை மற்றும் பொருளாதார வளர்ச்சியால் போக்குவரத்துத் தேவைகள் அதிகரிப்பதால், 2031 வரை CHF 90 மில்லியன் வரை நிதிப் பற்றாக்குறை ஏற்படலாம் என கணிக்கப்பட்டுள்ளது. இதைச் சமாளிக்க வாகன வரி மற்றும் கனரக வாகனங்களுக்கான LSVA வருவாய் பகிர்வு மாற்றப்படுகிறது.

இதுவரை 65% சாலைகளுக்கும் 35% பொதுப் போக்குவரத்துக்கும் வழங்கப்பட்ட நிலையில், புதிய முறையில் 90% சாலைகளுக்கும் 10% பொதுப் போக்குவரத்துக்கும் ஒதுக்கப்படும். ஆனால் பொதுப் போக்குவரத்துக்கான நிதி உண்மையில் குறைக்கப்படாது; ஏற்பட்ட வித்தியாசத்தை மாகாணத்தின் கூடுதல் அரச நிதி மூலம் ஈடுசெய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும், தேவையான சந்தர்ப்பங்களில் Verkehrsverbund Luzern (VVL)-க்கு கூடுதல் ஒருமுறை நிதி வழங்கும் வாய்ப்பை தொடரவும் நாடாளுமன்றம் முடிவு செய்துள்ளது. இந்த மசோதாவுக்கு இன்னும் இரண்டாவது வாசிப்பும் இறுதி வாக்கெடுப்பும் நடைபெற வேண்டும். சட்ட மாற்றங்கள் திட்டமிட்டபடி சென்றால் 2028 முதல் நடைமுறைக்கு வரவுள்ளன.




# மனதை உறுதியாக வைத்திருக்க என்ன செய்யலாம்?

## Swiss மனநல நிபுணர் கூறும் வழிகள்

உலகில் போர்கள், காலநிலை மாற்றம், AI வளர்ச்சி, பொருளாதார மற்றும் சமூக நிச்சயமற்ற தன்மை போன்றவை பலரிடமும் கவலையை அதிகரிக்கின்றன. இத்தகைய காலங்களில் மனதை உறுதியாக வைத்திருக்க நல்ல சமூக உறவுகள் மிகவும் முக்கியம் என UPK Basel-ன் Prof. Dr. Undine Lang கூறுகிறார்.

### நண்பர்கள் - மனநலத்திற்கான முக்கிய பாதுகாப்பு

நம்மைப் புரிந்துகொள்ளும் ஒருவர் இருப்பது, பிரச்சினைகளைப் பகிர்ந்துகொள்வது, ஒன்றாகச் சிரிப்பது அல்லது தேவையான நேரத்தில் நடைமுறை உதவி கிடைப்பது மன அழுத்தத்தைக் குறைக்க உதவும். அதிகமான நண்பர்கள் அவசியமில்லை; மனம்விட்டுப் பேசக்கூடிய இரண்டு அல்லது மூன்று நல்ல உறவுகள்கூட முக்கியமானவை என அவர் விளக்குகிறார்.

அதேபோல் ஓவியம், இசை, வாசிப்பு, நாட்குறிப்பு எழுதுதல், பின்னல், யோகா, நடைப்பயிற்சி, விளையாட்டு அல்லது மற்றவர்களுடன் சேர்ந்து உணவருந்துதல் போன்ற பிடித்தமான செயல்களில் முழுமையாக ஈடுபடுவது மனதை எதிர்மறையான சிந்தனைகளிலிருந்து விலக்க உதவுகிறது.

### உடற்பயிற்சி மட்டுமல்ல - மகிழ்ச்சியளிக்கும் செயல்பாடு வேண்டும்

மனநல சிகிச்சை வழிகாட்டுதல்களிலும் உடற்பயிற்சியின் பயன் ஆதாரங்களுடன் இடம்பெற்றுள்ளதாக Lang குறிப்பிடுகிறார். ஆனால் கடுமையான உடற்பயிற்சி அவசியமில்லை. வாரத்தில் சில முறை நடைப்பயிற்சி போன்ற உடல் இயக்கங்கள்கூட உதவலாம்.

முக்கியமாக, "இதைச் செய்த பிறகு நன்றாக இருக்கும்" என்பதற்காக மட்டும் அல்லாமல், செய்துகொண்டிருக்கும் போதே மகிழ்ச்சியளிக்கும் செயல்பாட்டைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்பதே அவரது கருத்து.

### சிரிப்பு, நன்றியுணர்வு, இயற்கை

நகைச்சுவையும் சிரிப்பும் மன அழுத்த ஹார்மோன்களைக் குறைக்க உதவுவதாக அவர் குறிப்பிடுகிறார். அதேபோல் தினமும் நமக்கு நன்றாக நடந்த மூன்று விஷயங்களை நினைத்துப் பார்ப்பது அல்லது எழுதுவது போன்ற நன்றியுணர்வு பயிற்சிகள், நேர்மறையான பார்வையை வளர்க்க உதவலாம்.

இயற்கையுடன் நேரம் செலவிடுதல், பொழுதுபோக்குகளைத் தொடருதல், செல்லப்பிராணிகளுடன் இருப்பது, புதிய விஷயங்களில் ஆர்வம் காட்டுதல் ஆகியவையும் மன உறுதித்தன்மைக்கு உதவும் காரணிகளாக அவர் குறிப்பிடுகிறார்.

### Social Media - அளவும் பயன்படுத்தும் முறையும் முக்கியம்

முடிவில்லாமல் சமூக ஊடகங்களை Scroll செய்து எதிர்மறைச் செய்திகளைப் பார்ப்பது மன அழுத்தத்தை அதிகரிக்கக்கூடும். அதற்குப் பதிலாக நம்பகமான சில ஊடகங்களைத் தேர்ந்தெடுத்து குறிப்பிட்ட நேரத்தில் மட்டும் செய்திகளைப் பார்ப்பதும், பின்னர் நமது குடும்பம், வேலை, நண்பர்கள் மற்றும் அன்றாட வாழ்க்கையில் மீண்டும் முழுமையாக ஈடுபடுவதும் சிறந்த அணுகுமுறை என Lang கூறுகிறார்.

குறிப்பாக இளைஞர்களிடம் சமூக ஊடகங்களில் மற்றவர்களுடன் தங்களை ஒப்பிடுவது உடல் தோற்றம் உள்ளிட்ட விஷயங்களில் தன்னம்பிக்கையை பாதிக்கக்கூடும். Likes எண்ணிக்கை உண்மையான நல்வாழ்வை அதிகரிப்பதில்லை என்பதையும் அவர் சுட்டிக்காட்டுகிறார்.

### முக்கியமானது - உங்கள் வாழ்க்கைக்கான 'திசைகாட்டி'

எல்லோருக்கும் ஒரே தீர்வு கிடையாது. "அதிகமாக உடற்பயிற்சி செய், அதிக மானவர்களைச் சந்தி" என்ற பொதுவான பட்டியல் கூட சிலருக்கு கூடுதல் அழுத்தத்தை உருவாக்கலாம்.

எனவே, "எனக்கு உண்மையில் முக்கியமானது என்ன? என்னுடைய மதிப்புகள் என்ன? எனக்கு சக்தி தருவது எது?" என்பதை அறிந்து அதற்கேற்ப வாழ்க்கையை அமைத்துக்கொள்வதே முக்கியம் என Lang வலியுறுத்துகிறார்.

மேலும், பல வாரங்களாக தொடரும் கடுமையான மனச்சோர்வு, தூக்கமின்மை, செயலாற்றும் சக்தி இழப்பு போன்ற அறிகுறிகள் இருந்தால், அதை வெறும் மன உறுதி குறைவாகக் கருதாமல் தொழில்முறை மருத்துவ அல்லது உளவியல் உதவியை நாடுவது முக்கியம் என்றும் அவர் தெளிவுபடுத்துகிறார்.



# Geneva-வில் Wonder of Asia - இலங்கையின் சுற்றுலா, கலாசாரம் சிறப்பாக காட்சிப்படுத்தப்பட்டது




Geneva-வில் நடைபெற்ற Asian Ambassadors' Wives Association in Geneva (AAWAG) அமைப்பின் வருடாந்த நிகழ்வில் இலங்கையின் சுற்றுலா, கலாசாரம் மற்றும் பாரம்பரிய சிறப்புகள் காட்சிப்படுத்தப்பட்டன.

செப்டம்பர் 2 அன்று WIPO கட்டிடத்தில், "Wonder of Asia" என்ற கருப்பொருளில் நடைபெற்ற நிகழ்வில் Geneva-விலுள்ள இலங்கையின் நிரந்தரத் தூதரகம் பங்கேற்றது.

இலங்கை அரங்கில் உலகப் புகழ்பெற்ற சிகிரியா பாறைக்கோட்டை பிரதான பின்னணியாக அமைக்கப்பட்டிருந்தது. அத்துடன் Ceylon Tea, Batik, இலங்கை வாசனைத் திரவியங்கள் மற்றும் Kottu உள்ளிட்ட நாட்டின் பிரபலமான தயாரிப்புகளும் உணவுப் பாரம்பரியமும் அறிமுகப்படுத்தப்பட்டன.

Geneva-வில் வாழும் இலங்கை சமூகத்தினரின் வண்ணமயமான கலாசார நிகழ்ச்சிகளும் இடம்பெற்று, இலங்கையின் பாரம்பரியத்தையும் கலாசார வளத்தையும் பார்வையாளர்களுக்கு எடுத்துக்காட்டின.

ஆசிய நாடுகளை தனித்துவமான சுற்றுலாத் தலங்களாக அறிமுகப்படுத்துவதுடன், ஆசியாவின் பல்வேறு கலாசாரங்களையும் ஒரே மேடையில் கொண்டாடுவது இந்த நிகழ்வின் முக்கிய நோக்கமாக அமைந்தது.




# மண்ணுக்குள் உள்ளாடை புதைத்து ஆய்வு

# சுவிஸ் ஆராய்ச்சிக்கு Ig Nobel பரிசு!

Switzerland-ல் மேற்கொள்ளப்பட்ட மிகவும் வித்தியாசமான ஒரு அறிவியல் ஆய்வு 2026 Ig Nobel பரிசை வென்றுள்ளது. University of Zurich (UZH) மற்றும் சுவிஸ் வேளாண் ஆராய்ச்சி நிறுவனமான Agroscope இணைந்து நடத்திய இந்தத் திட்டத்தில், சாதாரண பருத்தி உள்ளாடைகளை மண்ணுக்குள் புதைத்து, அவை எவ்வளவு வேகமாகச் சிதைகின்றன என்பதை வைத்து மண்ணின் உயிரியல் ஆரோக்கியம் ஆய்வு செய்யப்பட்டது.

### உள்ளாடைக்கும் மண்ணின் ஆரோக்கியத்திற்கும் என்ன தொடர்பு?

இந்தத் திட்டத்தில் Switzerland முழுவதிலும் இருந்து சுமார் 1,000 பொதுமக்கள் பங்கேற்றனர். அவர்கள் 2,000-க்கும் அதிகமான பருத்தி உள்ளாடைகளை பல்வேறு இடங்களில் மண்ணுக்குள் புதைத்தனர். குறிப்பிட்ட காலத்திற்குப் பின்னர் அவை மீண்டும் தோண்டி எடுக்கப்பட்டு ஆய்வு செய்யப்பட்டன.

உள்ளாடையின் பருத்திப் பகுதியை மண்ணிலுள்ள பாக்டீரியா, பூஞ்சை உள்ளிட்ட நுண்ணுயிர்கள் உணவாகப் பயன்படுத்துகின்றன. எனவே உள்ளாடை அதிகமாகச் சிதைந்திருந்தால், அந்த மண்ணில் உயிரியல் செயல்பாடு அதிகமாக இருப்பதற்கான அறிகுறியாக ஆராய்ச்சியாளர்கள் அதைப் பயன்படுத்தினர்.

இந்தத் திட்டம் வெறும் நகைச்சுவையான பரிசோதனை அல்ல. பொதுமக்களை நேரடியாக அறிவியல் ஆராய்ச்சியில் பங்கேற்கச் செய்து, மண்ணின் ஆரோக்கியம், நுண்ணுயிர்களின் செயல்பாடு மற்றும் மண் பாதுகாப்பின் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதும் இதன் முக்கிய நோக்கமாக இருந்தது.

### ஏன் Ig Nobel பரிசு?

Ig Nobel என்பது முதலில் மக்களை சிரிக்கவைத்து, பின்னர் சிந்திக்க வைக்கும் அசாதாரண அறிவியல் ஆராய்ச்சிகளை கௌரவிக்கும் பரிசாகும். உள்ளாடையை மண்ணில் புதைத்து மண்ணின் உயிரியல் செயல்பாட்டை மக்களுக்கு எளிதாக விளக்கிய இந்த சுவிஸ் முயற்சி அதற்கான சிறந்த உதாரணமாக அமைந்தது.




# Zuerich விமான நிலையத்தில் சிகரெட் கடத்தல் அம்பலம்

## Computer Rack-களுக்குள் மறைக்கப்பட்ட 5.84 லட்சம் சிகரெட்டுகள் பறிமுதல்!

Zürich விமான நிலையத்தின் சரக்குப் பகுதியில், 584,000 வரி செலுத்தப்படாத சிகரெட்டுகளை சுவிஸ் சுங்க மற்றும் எல்லைப் பாதுகாப்பு அதிகாரிகள் (BAZG) கண்டுபிடித்து பறிமுதல் செய்துள்ளனர்.

கடத்தல்காரர்கள் சிகரெட்டுகளை சாதாரண சரக்காகக் காட்டுவதற்காக Computer Rack-களுக்குள் மறைத்து வைத்திருந்தது சோதனையின்போது தெரியவந்துள்ளது.

Dubai-யிலிருந்து Great Britain நோக்கி இந்தச் சரக்கு Dubai-யிலிருந்து வந்ததாகவும், அதன் இறுதி இலக்கு Great Britain எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஜூலை 30 அன்று Zürich விமான நிலையத்தின் Transit பகுதியில் அதிகாரிகள் மேற்கொண்ட சோதனையில், "Computer Racks" என அறிவிக்கப்பட்டிருந்த சரக்கின் உள்ளே சிகரெட்டுகள் மறைத்து வைக்கப்பட்டிருந்தன.

மொத்தமாக 2,920 கார்டன்களில் 584,000 சிகரெட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டன.

இந்தக் கடத்தல் வெற்றியடைந்திருந்தால் கணிசமான வரி செலுத்தப்படாமல் தவிர்க்கப்பட்டிருக்கக்கூடும். இதில் சுமார் CHF 4,000 சுங்கவரி, CHF 120,000-க்கும் அதிகமான புகையிலை வரி மற்றும் CHF 17,000-க்கும் அதிகமான VAT அடங்குகின்றன.

சுவிஸ் சுங்க அதிகாரிகள் சிகரெட்டுகளை பறிமுதல் செய்து குற்றவியல் விசாரணையைத் தொடங்கியுள்ளனர். பறிமுதல் செய்யப்பட்ட சிகரெட்டுகள் பின்னர் அழிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.




# நாடு முழுவதும் Conversion Therapy தடை?

## Swiss அரசு பரிசீலனை

Switzerland-ல் LGBTQ+ நபர்களின் பாலியல் ஈர்ப்பு, பாலின அடையாளம் அல்லது பாலின வெளிப்பாட்டை மாற்ற அல்லது அடக்க முயலும் "Conversion Therapy / Konversions-massnahmen" குறித்து நாடு முழுவதும் ஒரே மாதிரியான சட்ட ஒழுங்கு முறையை கொண்டுவருவது பொருத்தமானதாக இருக்கலாம் என்று Federal Council (Bundesrat) தெரிவித்துள்ளது.

தற்போதுள்ள குற்றவியல், சிவில் மற்றும் சுகாதாரத் தொழில் சட்டங்கள் ஏற்கனவே பரந்த பாதுகாப்பை வழங்குகின்றன. இருப்பினும், சில Kantons தனித்தனியாக கூடுதல் தடைகள் அல்லது சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதால், Switzerland முழுவதும் பாதுகாப்பு ஒரே மாதிரியாக இல்லை. இதனால் கூட்டாட்சி மட்டத்திலான சட்டத்தை பரிசீலிக்கலாம் என அரசு கூறுகிறது.

2023 Swiss LGBTIQ+ Panel தரவுகளின்படி, ஆய்வில் பங்கேற்ற lesbian, gay அல்லது bisexual நபர்களில் 9%க்கும் அதிகமானவர்களும், trans நபர்களில் சுமார் 16% பேரும் தங்களது பாலியல் ஈர்ப்பு அல்லது பாலின அடையாளத்தை மாற்ற/அடக்க முயற்சிகளை எதிர்கொண்டதாக தெரிவித்துள்ளனர்.




# EU ஒப்பந்தத் தொகுப்புக்கு

## Stnderat குழுவில் தெளிவான ஆதரவு

Switzerland-EU உறவுகளை நிலைப்படுத்தவும் மேலும் மேம்படுத்தவும் உருவாக்கப்பட்ட "Bilaterale III" ஒப்பந்தத் தொகுப்பின் முக்கிய பகுதிக்கு, Ständerat-இன் வெளிநாட்டு விவகாரக் குழு APK-S தெளிவான ஆதரவை வழங்கியுள்ளது.

செப்டம்பர் 3-4 நடைபெற்ற ஆலோசனைகளின் முடிவில், EU உடனான உறவுகளை நிலைப்படுத்தும் ஒப்பந்தங்களுக்கு 9 வாக்குகள் ஆதரவு, 3 எதிர்ப்பு, 1 வாக்கு விலகல் என்ற முடிவுடன் குழு ஒப்புதல் வழங்கியது. இதன் மூலம் இந்தப் பகுதி Ständerat-இன் இலையுதிர்கால கூட்டத்தொடரில் விவாதிக்கத் தயாராகியுள்ளது.

இந்தத் தொகுப்பில் முக்கியமாக EU சட்டங்களை மாறும் சூழலுக்கு ஏற்ப ஏற்றுக்கொள்ளும் நடைமுறை, சுவிஸ் ஊதியப் பாதுகாப்பு, மக்கள் சுதந்திரமாகச் செல்லும் ஒப்பந்தம், அதிக குடியேற்றம் ஏற்பட்டால் பயன்படுத்தக்கூடிய பாதுகாப்பு விதி போன்றவை விவாதத்தின் மையமாக உள்ளன. குடியேற்றம் தொடர்பான ஒரு கட்டண முன்மொழிவுக்கும் குழு 5-3 வாக்குகளால், 5 விலகல்களுடன் ஆதரவு தெரிவித்துள்ளது.

அடுத்ததாக உணவுப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான புதிய EU ஒப்பந்தங்களும் Ständerat-ல் எடுத்துக்கொள்ளப்படவுள்ளன. மின்சார ஒப்பந்தம் இன்னும் தயாராகவில்லை; அது குளிர்கால கூட்டத்தொடரில் விவாதிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.




# Locarno TI-ல் அபூர்வமான செப்டம்பர் வெப்பம் -

## தொடர்ந்து 3 'வெப்பமண்டல இரவுகள்'

Ticino மாகாணத்தின் Locarno-Monti பகுதியில் செப்டம்பர் மாதத்திலேயே தொடர்ந்து மூன்று இரவுகள் வெப்பநிலை 20°C-க்கு கீழ் இறங்காமல் பதிவாகியுள்ளது. இதனால் அவை வானிலை அறிவியலில் "Tropennacht - வெப்பமண்டல இரவு" என வகைப்படுத்தப்பட்டுள்ளன.

சனிக்கிழமை காலை குறைந்தபட்ச வெப்பநிலை 20.7°C, ஞாயிற்றுக்கிழமை 21.2°C, திங்கட்கிழமை 20.9°C ஆக பதிவானது. Locarno-Monti-ல் 1935 முதல் பதிவுகள் தொடங்கியதிலிருந்து, செப்டம்பர் மாதத்தில் இதுவரை மொத்தம் 9 வெப்பமண்டல இரவுகள் மட்டுமே பதிவாகியுள்ளதால் இது அரிய நிகழ்வாக கருதப்படுகிறது.

2026 கோடைக்காலத்தில் Locarno ஏற்கனவே Switzerland-ன் Tropennacht hotspot ஆக மாறியுள்ளது. இந்த ஆண்டில் இதுவரை அங்கு 57 இரவுகளில் வெப்பநிலை 20°C-க்கு கீழ் செல்லவில்லை; Lugano-வில் 54 வெப்பமண்டல இரவுகள் பதிவாகியுள்ளன.

தென் Switzerland பகுதியில் செவ்வாய் மாலை முதல் புதன் மாலை வரை 30-50 லிட்டர்/சதுர மீட்டர் மழை எதிர்பார்க்கப்பட்டாலும், அடுத்த பத்து நாட்களும் பெரும்பாலும் உயரழுத்த வானிலை நிலவும் என MeteoSwiss தெரிவித்துள்ளது.




# Luzern: புதிய PH Campus வசதிகளுக்கு CHF 20 மில்லியன் ஒப்புதல்

Luzern மாகாண நாடாளுமன்றம், Pädagogische Hochschule Luzern (PH Luzern) புதிய Campus Horw-க்கு தேவையான உபகரணங்கள் மற்றும் வசதிகளை அமைப்பதற்காக CHF 20 மில்லியன் சிறப்பு நிதியை இன்று 86-26 வாக்குகளால் அங்கீகரித்துள்ளது; இருவர் வாக்களிக்கவில்லை.

PH Luzern தற்போது பல்வேறு இடங்களில் இயங்கும் 8 வளாகங்களை ஒன்றிணைத்து, புதிய Campus Horw-க்கு 2031-ல் இடம்பெயர திட்டமிட்டுள்ளது. புதிய தளபாடங்கள் மற்றும் உபகரணங்களுக்கான மொத்த செலவு சுமார் CHF 48 மில்லியன் என மதிப்பிடப்பட்டுள்ளது. அதில் CHF 20 மில்லியனை மாகாணம் வழங்குகிறது.

புதிய Campus-ல் சுமார் 2,400 PH மாணவர்களும் 540 ஊழியர்களும் பயன்பெறுவார்கள். செலவுகள் கடுமையாக கண்காணிக்கப்பட வேண்டும் என்றும், பின்னர் கூடுதல் நிதி கோரிக்கைகள் வரக்கூடாது என்றும் சில கட்சிகள் வலியுறுத்தியுள்ளன

# தெரிந்து கொள்ளுங்கள்:




# Switzerland-ல் உண்ணிக் கடி ஒரு விபத்து என்பது தெரியுமா?

**“ஒரு சிறிய உண்ணிக் கடி... Insurance பதிவில் இது ஒரு விபத்து!”**

Switzerland-ல் காடு, தோட்டம் அல்லது உயரமான புற்களில் நடந்துவிட்டு வந்ததும் உடலில் உண்ணி–அதாவது Tick–ஒட்டியிருக்கிறதா என்று பார்ப்பது முக்கியம்.

உண்ணிகள் பொதுவாகக் கடல் மட்டத்திலிருந்து சுமார் 2,000 மீற்றர் உயரம் வரையான பகுதிகளில் காணப்படுகின்றன. அவை Lyme Borreliose என்ற பாக்டீரியா நோயையும், FSME எனப்படும் மூளை அழற்சி வைரஸ் நோயையும் பரப்பக்கூடும்.

உண்ணி ஒட்டியிருந்தால் பதற்றப்படாமல், உடனடியாக அகற்றுங்கள். மெல்லிய Pinzette மூலம் தோலுக்கு மிக அருகில் பிடித்து, நசுக்காமல் மெதுவாகவும் தொடர்ச்சியாகவும் நேராக இழுக்க வேண்டும்.

பின்னர் கடித்த இடத்தை கிரு மிநாசினியால் சுத்தப்படுத்துங்கள். உண்ணியைக் கொல்ல எண்ணெய், Glue அல்லது வேறு வீட்டு வைத்தியங்களைத் தடவிக்கொண்டு நேரத்தை வீணாக்காதீர்கள்.

முக்கியமாக, கடித்த தேதி மற்றும் உடலின் எந்தப் பகுதியில் கடித்தது என்பதைக் குறித்துவையுங்கள். முடிந்தால் புகைப்படமும் எடுத்து




க்கொள்ளுங்கள். ஏனெனில் அறிகுறிகள் சில நாட்கள் கழித்தே தோன்றலாம்.

கடித்த இடத்தைச் சுற்றி விரிவடையும் சிவப்பு வளையம், காய்ச்சல், தலைவலி, மூட்டுவலி அல்லது சளிக்காய்ச்சல் போன்ற அறிகுறிகள் தோன்றினால் மருத்துவரை அணுக வேண்டும்.

**திரையில்:**

**“சிவப்பு வளையம் • காய்ச்சல் • தலைவலி = மருத்துவர்”**

இங்கே பலருக்குத் தெரியாத முக்கிய தகவல் ஒன்று உள்ளது: Swiss சட்ட மற்றும் காப்புறுதி நடைமுறையில் உண்ணிக் கடியும், அதனால் ஏற்படும் தொற்றுநோய்களும் விபத்தின் விளைவாக கருதப்படுகின்றன.

எனவே உண்ணிக் கடிக்குப் பிறகு மருத்துவ சிகிச்சை பெற்றால், மருத்துவரிடம் அதன் காரணத்தைத் தெளிவாகச் சொல்லி, உங்களுக்குப் பொருந்தும் Unfallversicherung-க்கும் அறிவிக்க வேண்டும்.

FSME தடுப்பூசி பொதுவாக மூன்று வயதுக்கு மேற்பட்ட, அபாயப் பகுதியில் உண்ணிகளுடன் தொடர்பு ஏற்பட க்கூடியவர்களுக்குப் பரிந்து ரைக்க ப்படுகிறது. Ticino தவிர Switzerland முழுவதும் FSME அபாயப் பகுதியாகக் கருதப்படுகிறது. தனிப்பட்ட ஆலோசனைக்கு மருத்துவர் அல்லது மருந்தகத்தை அணுகுங்கள்.

Switzerland-ல் உண்ணிக் கடி Insurance நடைமுறையில் ஒரு விபத்தாகக் கருதப்படுகிறது என்பது உங்களுக்கு முன்பே தெரிந்திருந்ததா? இயற்கைப் பகுதிகளுக்குச் செல்லும் நண்பர்களுடனும் பகிருங்கள்!


SAVE THE DATE
வெள்ளிவீதி
இலக்கியக் கூடுகை 2
அமர்வு 1
எழுத்தாளர் - மொழிபெயர்ப்பாளர்
காயத்ரி ஆர்.
அமர்வு 2
எழுத்தாளர்
தில்லை
அமர்வு 3
எழுத்தாளர்
தர்மினி
அமர்வு 4
எழுத்தாளர்
நவமகன்
அமர்வு 5
எழுத்தாளர் - மொழிபெயர்ப்பாளர்
பிரசாந்தி சேகரம்
அமர்வு 6
எழுத்தாளர் - அரங்கக் கலைஞர்
லிவிங் ஸ்மைல் வித்யா
01.11.2026
SUNDAY
ZÜRICH, SWITZERLAND
தகவல்
சயந்தன் /
+41 79 519




# Schengen எல்லைகளில் பயணிகளுக்கு முக்கிய மாற்றம்!

## செப்டம்பர் 7 முதல் biometric எல்லைச் சோதனைகள் தீவிரமாகலாம் - நீண்ட வரிசைகள் ஏற்படும் அபாயம்

Schengen பகுதிக்குள் நுழையும் EU அல்லாத குறுகியகாலப் பயணிகளுக்கான Entry/Exit System (EES) தொடர்பில் செப்டம்பர் 7 முக்கிய நாளாகியுள்ளது.

கோடைக்கால பயண நெரிசலின்போது, விசேட சூழ்நிலைகளில் biometric பதிவுகளை தற்காலிகமாக நிறுத்த அனுமதிக்கப்பட்டிருந்த நெகிழ்வுத்தன்மை செப்டம்பர் 6 உடன் முடிவடைகிறது.

இதனால் சில Schengen வெளிப்புற எல்லைகள் மற்றும் விமான நிலையங்களில் முகப்படம், கைரேகை உள்ளிட்ட biometric பதிவுகள் காரணமாக எல்லைச் சோதனைக்கு கூடுதல் நேரம் தேவைப்படலாம்.

### Switzerland-க்கும் பொருந்தும்

Switzerland EU உறுப்பினர் நாடு அல்ல. ஆனால் Schengen அமைப்பில் இருப்பதால், Schengen பகுதிக்கு வெளியிலிருந்து Switzerland-க்குள் நுழையும் EES-க்கு உட்பட்ட பயணிகளுக்கும் இந்த நடைமுறை பொருந்தும். EES புதியதாக செப்டம்பர் 7 அன்று தொடங்கவில்லை. இது 12 அக்டோபர் 2025 முதல் படிப்படியாக அறிமுகப்படுத்தப்பட்டு, 10 ஏப்ரல் 2026 முதல் அதிகாரப்பூர்வமாக முழுமையாகச் செயல்படுவதாக அறிவிக்கப்பட்டது.

### பயணிகள் கவனத்திற்கு

சில எல்லை நிலையங்களில் இன்னும் தொழில்நுட்ப மற்றும் நடைமுறை மாற்றங்கள் தேவைப்படுவதால், செப்டம்பர் 7 முதல் எல்லா இடங்களிலும் ஒரே மாதிரியான நடைமுறை இருக்கும் என்று கூற முடியாது.

எனினும் Schengen பகுதிக்கு வெளியிலிருந்து Switzerland வருபவர்கள் விமான நிலைய எல்லைச் சோதனைக்கு கூடுதல் நேரத்தை ஒதுக்குவது நல்லது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சுவிஸுக்கு வரும் வெளிநாட்டு ஊழியர்களுக்கு புதிய கட்டணம்?

## CHF 4,000 யோசனை




சுவிட்சர்லாந்துக்கு வெளிநாடுகளில் இருந்து பணியாளர்களை அழைத்து வரும் நிறுவனங்களிடம் எதிர்காலத்தில் குடியேற்றக் கட்டணம் (Zuwanderungsabgabe) வசூலிப்பது குறித்து சுவிஸ் மத்திய அரசு ஆராய்ந்து வருகிறது.

ஒரு முன்மொழிவின்படி, வெளிநாட்டிலிருந்து பணிக்கு அழைத்து வரப்படும் ஒவ்வொரு ஊழியருக்கும் ஆண்டுக்கு CHF 4,000 மற்றும் அவருடன் வரும் வயது வந்த குடும்ப உறுப்பினருக்கு CHF 2,000 செலுத்த வேண்டியிருக்கலாம். இந்தத் தொகையை ஊழியர் அல்ல, அவரை வேலைக்கு அமர்த்தும் நிறுவனமே செலுத்த வேண்டும் என்பதே யோசனை.

### இதன் அரசியல் பின்னணி என்ன?

சுவிட்சர்லாந்தில் அதிகரித்து வரும் குடியேற்றம் பல ஆண்டுகளாக முக்கிய அரசியல் விவாதமாக இருந்து வருகிறது.

வெளிநாட்டு திறமையான பணியாளர்கள் நாட்டின் பொருளாதாரத்திற்குத் தேவைப்படும் அதேவேளை, மக்கள் தொகை அதிகரிப்பால் வீட்டுவசதி, பாடசாலைகள், சாலைகள் மற்றும் பொதுப் போக்குவரத்து மீது அழுத்தம் அதிகரிப்பதாக வாதிடப்படுகிறது.

இந்தக் கட்டண யோசனை புதியதல்ல. 2014-ஆம் ஆண்டு வெகுஜன குடியேற்றத்தை கட்டுப்படுத்தும் மக்கள் முன்முயற்சி (Masseneinwanderungsinitiative) ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்னரும் இதுபோன்ற திட்டம் விவாதிக்கப்பட்டது.

தற்போது "10 மில்லியன் சுவிட்சர்லாந்து" தொடர்பான குடியேற்ற விவாதம் மற்றும் புதிய சுவிஸ்-EU ஒப்பந்தங்கள் காரணமாக இந்த யோசனை மீண்டும் அரசியல் கவனம் பெற்றுள்ளது.

FDP மாநிலங்களவை உறுப்பினர் Andrea Caroni CHF 4,000 என்ற தொகையை முன்வைத்துள்ளார். Mitte கட்சியின் மாநிலங்களவை உறுப்பினர் Heidi Z'graggen முன்வைத்த நாடாளுமன்ற நடவடிக்கைக்குப் பதிலளித்த மத்திய அரசு, நீதித்துறை அமைச்சர் Beat Jans தலைமையில் பல்வேறு மாதிரிகளை ஆராயத் தயாராகியுள்ளது.

இதன் நோக்கம் குடியேற்றத்தை ஓரளவு கட்டுப்படுத்துவதுடன், அதிகரிக்கும் மக்கள் தொகையால் ஏற்படும் கூடுதல் அரசுச் செலவுகளுக்கும் நிதி உருவாக்குவதாகும்.



# அளவோடு நவீனம்

அருண் செல்வராஜ்

உலகம் 'நவீனம்' எனும் அரக்கனின் பிடியில் சிக்குண்டு ஓடிக் கொண்டிருக்கிறது. இந்த உலகில் மனிதர்கள், இருந்த இடத்தில் இருந்து கொண்டு உலகத்தையே தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முயல்கின்றனர்.

எல்லா விடயங்களும் கேள்வி எழுப்பும் விடயங்களாகி விட்டன. புதிய புதிய கண்டுபிடிப்புகள், மனிதர்களை வெறும் பொருட்கள் போலவும் வேறு ஒரு உலகத்திற்கும் கொண்டு சென்றுள்ளன. ஒன்று பிறகு மற்றொன்று என்று அவை தொடர்ந்து வளர்ந்துகொண்டு வருகின்றன.



யுஜ தொழில்நுட்பங்களின் வளர்ச்சி – ஒரு பக்கம் உலகத்துக்கு வளர்ச்சி போல் தோன்றினாலும், மற்றொரு பக்கம் சமூக கலாசார சீரழிவுகளையும் ஏற்படுத்தி வருகிறது. உலகம் பல நாடுகளைக் கொண்ட ஒரு கட்டமைப்பு. அந்த நாடுகள் ஒவ்வொன்றும் தமக்கென தனித்துவமான கலாசாரம், பண்பாடு என ஒரு சிறப்பை கொண்டுள்ளன. ஆனால் இந்த நவீன வளர்ச்சிகள், ஒவ்வொரு சமூகத்தினதும் தனித்துவத்தையே பாதிக்கின்றன என தோன் றுகிறது.

ஒரு சமூகத்தின் உயர்வை அதன் கலாசார விழுமியங்களைப் பார்த்து அறிந்துகொள்ள முடியும். உதாரணமாக, தென்னிந்தியாவின் கீழடியில் கிடைக்கப்பெற்ற மண்பாண்டங்கள், தங்கம், உலோகம் போன்றவற்றைக் கொண்டு, தமிழர்கள் களிமண்ணில் பொருட்களை தயாரித்தனர், உலோகங்களை உருக்கி ஆயுதங்களாக பயன் படுத்தினர் என்பதை தெரிந்து கொள்ள முடியும்.

எமது சமூகத்தின் வாழ்வியல் அடையாளம் என்னவென்றால் அது நமது வாழ்க்கை முறையும், விழுமியங்களுமாகும். ஆனால் அதில் நவீனத்தின் கலப்பு இருந்தால் நம் தனித்துவம் இழக்கப்படும். அப்போதுதான் கேள்வி எழுகிறது.




## நவீனம் இல்லாமல் எப்படி முன்னேற முடியும்?

நவீனத்துடன் நமது விழுமியங்களையும் பேணிக் காக்கவேண்டும். நமது கலாசார விழுமியங்களை மறந்து நவீனத்துடன் கலந்து விட்டால், அந்தச் சமூகம் அடையாளம் இழந்த சமுதாயமாக மாறி விடும்.

எனக்குத் தெரிந்த ஜப்பானிய நண்பருடன் பேசிக்கொண்டு இருந்தபோது, அவர் சொன்னார், “அதிகமாக வேலை செய்கின்ற ஜப்பானியர்கள் உணவுக்குப் பதிலாக மாத்திரைகளை உட்கொள் கிறார்கள். மனித நேயம், குடும்பம், ஒற்றுமை ஆகியவைகள் அவர்களிடம் மெதுவாக குறைந்துவிட்டன.

குறிப்பாக சில ஜப்பானியர்கள் சிலிக்கோன் போலி பெண்கள் மற்றும் குடும்பங்களைக் கொண்டு வாழ்க்கையைத் தொடர்ந்து வருகின்றனர்“ என்று குறிப்பிட்டார்.

கடந்த மாதம் ஜப்பானிய அரசு, மக்கள் அதிகமாக குழந்தைகள் பெற வேண்டும், இல்லையெனில் நாட்டின் எதிர்கால வளர்ச்சி பாதிக்கப்படும் என விழிப் புணர்வு ஏற்படுத்தியது. நவீனத்தின் உச்சத்தில் இருக்கும் ஜப்பான், இன்னும் சில ஆண்டுகளில் தனது வளர்ச்சியிலேயே பின்னடைவைக் காணும் நிலைக்கு வந்துள்ளது. இது ancient Japanese social values எனும் பாரம்பரிய விழுமியங்கள் மறைந்து போனதன் விளைவாக தோன்றுகிறது.

## நவீனம் வளர்த்த கொள்கைகளின் எதிர்மறை விளைவுகள்:

நவீனத்தால் மக்கள் குடும்பம், வாழ்க்கைமுறை, சமூகம், கலாசாரம், விழுமியங்கள் போன்றவற்றை சிந்திக்காமல், பொருளாதார உயர்வை மட்டுமே இலக்காகக் கொண்டு ஓடிக்கொண்டு இருக் கிறார்கள். இது ஒரு கட்டத்தில் மனிதர்களை மன அழுத்தத்திற்கு ஆளாக்குகிறது. சக மனிதருடன் பழகும் பழக்கம் குறைந்து, இயந்திரங்களோடு பழகும் நிலைக்கு அழுத்துகிறது.

## அழிந்து வரும் முக்கியமான சமூக மற்றும் கலாசார அம்சங்கள்:

மரபுக்கேற்ப நடக்கும் திருமணங்கள் மற்றும் விழாக்களில் இப்போது சடங்குகள் எளிமைப்படுத்தப்பட்டு, அதன் ஆழமும் அர்த்தமும் குறைந்துவிட்டன.

முதியோருக்கான மரியாதையின் குறைவு. அறிவும் அனுபவமும் கொண்டவர்களாக இருந்தும், அவர்கள் மீம்ஸ்களில் கேலிப்பொருள்கள் ஆக்கப்பட்டிருக்கிறார்கள்.

நட்பு உறவுகள், நேரடி உறவுகளின் இழப்பு. நேரில் சந்தித்து பேசும் பழக்கம் மாறி, ஆன்லைன் உரையாடல்களாகவே சுருங்கிவிட்டது.

வணிகத்துடன் கலந்த கலாசாரம், கலை, மொழி. நம் சொந்த கலை, இலக்கியம், நாடகம், ஓவியம், மருத்துவம் போன்றவை வணிக நோக்கங்களால் கரைந்து விட்டன.

## எதிர்காலம் - எச்சரிக்கையா அல்லது ஏற்றுக்கொள்ளத் தக்கதா?

நவீன உலகத்தை முழுமையாக எதிர்க்க முடியாது. ஆனால் அதை சமனாக்கிக் கொண்டு, நமது பாரம்பரியங்களையும் பாதுகாத்து செல்ல வேண்டியது நமது கடமை. தீர்வுகள் - மாணவர்கள் பள்ளிக்கல்வியில் இருந்தே தத்தமது கலாசாரத்தின் முக்கியத்துவத்தை கற்றுக் கொள்ள வேண்டும். ஊடகங்களில் மரபு கதைகள், இலக்கியம் மற்றும் அறம் பற்றிய நிகழ்ச்சிகள் அதிகரிக்க வேண்டும்.

குடும்பங்கள் ஒன்றுகூடி மரபு விழாக்களை கொண்டாட வேண்டும். நமது சொந்த கலை, மொழி, பண்பாட்டு சார்ந்த உள்ளடக்கங்களை ஊக்குவிக்க வேண்டும்.

நவீனம் நம்மைத் தாண்டி வளர்ந்தாலும், அதை ஒரு வழிகாட்டியாக மட்டும் எடுத்து நமது கலாசார விழுமியங்களுடன் இணைத்து வாழ்ந்தால் அதுதான் நமக்கு ஒரு நிம்மதியான, நிலையான, நம்பிக்கையுள்ள சமூகத்தை உருவாக்கும் வழி. அதுவே நமது ஊர், நமக்கே உரிய வாழ்வியல் எனும் உணர்வை மீண்டும் உயிர்ப்பிக்கும்.

‘நவீனம் என்பது ஒரு கருவி வாழ்க்கையின் இலக்கு அல்ல‘ - என்பதை நாம் புரிந்து கொள்வதே இன்றைய தலைமுறையின் பெரிய பொறுப்பு.




# புலம்பெயர் நாடுகளில் தமிழ் நூல்கள் மொழி பெயர்க்கப்பட வேண்டியது அவசியம்!

## பாரிஸ் நூல் வெளியீட்டில் கே.பி.லோகதாஸ் உரை



புலம்பெயர் நாடுகளில் தமிழ் மொழி, இலக்கியம் மற்றும் பண்பாட்டை அடுத்த தலைமுறையினரிடம் கொண்டு சேர்ப்பதற்கு தமிழ் நூல்களை பிற மொழிகளில் மொழிபெயர்ப்பது அவசியம் என பாரிசில் இலக்கிய ஆர்வலரும் எழுத்தாளருமான கே. பி. லோகதாஸ் தெரிவித்தார்.

பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் எழுத்தாளர் ஐங்கரன் விக்கினேஸ்வராவின் நான்கு நூல்களின் வெளியீட்டு விழா செப்டெம்பர் 5ஆம் தேதி சனிக்கிழமை பெருந்திரளான மக்கள் முன்னிலையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரான்ஸ் மற்றும் ஐரோப்பாவின் பல்வேறு பகுதிகளில் வாழும் தமிழ் எழுத்தாளர்கள், இலக்கிய ஆர்வலர்கள், சமூகச் செயற்பாட்டாளர்கள் மற்றும் வாசகர்கள் கலந்து கொண்டனர்.

நூல் வெளியீட்டு விழாவிற்குத் தலைமை தாங்கிய கே. பி. லோகதாஸ் தனது உரையில், தமிழில் வெளிவரும் சிறந்த இலக்கிய,






வரலாற்று, அரசியல் மற்றும் ஆய்வு நூல்கள் தமிழர்களிடையே மட்டுமன்றி, புலம்பெயர் சமூகங்கள் வாழும் நாடுகளிலும் பரவலாக அறிமுகப்படுத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார். தமிழ் நூல்களை ஆங்கிலம், பிரெஞ்சு உள்ளிட்ட உலக மொழிகளில் மொழிபெயர்ப்பதன் மூலம் தமிழ் மக்களின் வரலாறு, பண்பாடு, இலக்கியச் செழுமை மற்றும் சமூக அனுபவங்களை உலகளாவிய வாசகர்களிடம் கொண்டு செல்ல முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

குறிப்பாக, புலம்பெயர் நாடுகளில் வளர்ந்து வரும் தமிழ் இளைய தலைமுறையினர் தமது மொழி மற்றும் வரலாற்றுடன் தொடர்பைத் தொடர்ந்து பேணுவதற்கு மொழிபெயர்ப்பு முயற்சிகள் முக்கிய பங்காற்றும் எனவும் அவர் தெரிவித்தார். இதற்காக எழுத்தாளர்கள், பதிப்பாளர்கள், கல்வியாளர்கள், மொழிபெயர்ப்பாளர்கள் மற்றும் புலம்பெயர் தமிழ் அமைப்புகள் இணைந்து செயற்பட வேண்டியதன் அவசியத்தையும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்நூல் வெளியீட்டு விழாவின் ஒருங்கிணைப்பாளராக திருமதி நிசாந்தி அகில் செயற்பட்டார். திரு. அருள்மாறன் அறிமுக உரையை நிகழ்த்தினார். ஈழப் போரில் எழுத்தாயுதம் நூலாய்வை கவிஞர் ஈழபாரதியும், உக்ரேனிய போரும் ஊடகத் திரிபும் நூலாய்வை திரு. சிவா சின்னப்பொடியின் உரையை திரு. லிங்கமும், போர்க் களத்தின் பேனாக்கள் நூல் குறித்து திரு. விவேகானந்தனூர் சதீஸும், அரபு வசந்தம் நூல் குறித்து திரு. வாசுதேவனும் ஆய்வுரைகளை வழங்கினர்.

மேலும், இந்நிகழ்வில் திரு. முகுந்தன், திரு. எஸ். கே. ராஜன், திரு. துரைசிங்கம் மற்றும் ஆசிரியர் பிரியா லவன் ஆகியோர் சிறப்பு உரைகளை நிகழ்த்தினர். அத்துடன் நன்றியுரையை செல்வி. கல்கி தசரதன், செல்வி.கயல் நிரோஜன் வழங்கினர். இந்நிகழ்வின் நிறைவாக நூலாசிரியர் ஐங்கரன் விக்கினேஸ்வரா ஏற்புரையாற்றினார். நான்கு நூல்களின் உருவாக்கப் பின்னணி, அவற்றை எழுதுவதற்கான காரணங்கள், ஆய்வுப் பரப்பு மற்றும் அவை முன்வைக்கும் சிந்தனைகள் குறித்து அவர் தனது கருத்துகளைப் பகிர்ந்துகொண்டார்.

தமிழ் இலக்கியப் பரப்பில் சமகால அரசியல், வரலாறு மற்றும் சர்வதேச நிகழ்வுகள் தொடர்பான பதிவுகள் அதிகரித்து வரும் நிலையில், இந்நான்கு நூல்களும் வெவ்வேறு களங்களை இணைக்கும் முயற்சியாக அமைந்துள்ளன. புலம்பெயர் தமிழ்ச் சமூகத்தின் இலக்கியச் செயற்பாடுகள் விரிவடைந்து வரும் நிலையில், பாரிஸில் நடைபெற்ற இந்நான்கு நூல்களின் வெளியீட்டு விழா, தமிழ் இலக்கியத்தையும் சமகால அரசியல்-வரலாற்றுச் சிந்தனைகளையும் இணைக்கும் முக்கியமான இலக்கியச் சந்திப்பாக அமைந்தது.

பாரிஸ் மற்றும் ஐரோப்பாவின் பல்வேறு பகுதிகளில் வாழும் தமிழ் இலக்கிய ஆர்வலர்கள், எழுத்தாளர்கள், படைப்பாளிகள் மற்றும் வாசகர்கள் பெருமளவில் கலந்துகொண்டு விழாவைச் சிறப்பித்தனர்.





# காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு இது நினைவேந்தல் அல்ல - 36 ஆண்டுகளாக நீளும் காத்திருப்பு




1990 செப்டம்பர் 5ஆம் தேதி வந்தாறுமூலை Eastern University அகதி முகாமிலிருந்து 158 பேர் ஆயுதப்படையினரால் அழைத்துச் செல்லப்பட்டதாக இந்தக் கட்டுரை நினைவூட்டுகிறது. 36 ஆண்டுகள் கடந்தும் அவர்களின் நிலை குறித்து குடும்பங்களுக்கு உறுதியான பதில் கிடைக்கவில்லை என்பதே இதன் மைய வேதனை என பேராசிரியர் தங்கமுத்து ஜெயசிங்கம் ஆங்கில ஊடகமொன்றுக்கு( colombotelegraph )எழுதிய கட்டுரையில் தெரிவித்துள்ளார்.

காணாமல் போனவர்களின் குடும்பங்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் ஒரு நினைவு நாள் அல்ல; அது “இன்னும் ஒரு வருடம் பதிலின்றி கடந்துவிட்டது” என்ற ஆழமான மனவேதனையாக மாறுகிறது. குடும்பங்கள் ஆண்டுதோறும் கூடிக் கொண்டு தங்கள் துயரத்தையும் அனுபவங்களையும் பகிர்ந்து, காணாமல் போனவர்களின் நிலை குறித்து பதில் கோரி வருகின்றன.

நீதியும் காணாமல் போயிற்றா?

கட்டுரையாளர் முன்வைக்கும் முக்கியக் கேள்வி இதுதான்: ஒரு ஜனநாயக அரசில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் நிலை குறித்து விசாரணை செய்து பதில் வழங்குவது அரசின் கடமையல்லவா?

Jaffna-வில் காணாமல் போனவர்களுக்காக போராடும் தாய்மார்களின் அமைப்பும், பிற தேசிய அளவிலான அமைப்புகளும் பல ஆண்டுகளாக பதில் கேட்டு வருகின்றன. ஆனால் போதுமான முன்னேற்றம் இல்லை என கட்டுரை குற்றஞ்சாட்டுகிறது.

முன்னர் அமைக்கப்பட்ட Presidential Commission அறிக்கைகளில் சில அதிகாரிகளின் பெயர்கள் இடம்பெற்றிருந்தாலும், அவர்களிடம் முழுமையான விசாரணை நடத்தப்பட்டதா என்பது குறித்து கேள்வி எழுப்பப்படுகிறது.

“அவர்கள் எல்லாம் LTTE” என்ற வார்த்தை

கட்டுரையாளர் T. Jayasingam தனது தனிப்பட்ட அனுபவத்தையும் பதிவு செய்கிறார். 1990 செப்டம்பர் 8ஆம் தேதி, Eastern Command General Gerry De Silva தன்னிடம்:

"They are all LTTE, do not ask about them"

என்று கூறியதாக அவர் எழுதுகிறார்.

அந்தக் குற்றச்சாட்டு இருந்தால்கூட, ஒருவரின் குற்றம் நிரூபிக்கப்பட வேண்டியது நீதிமன்றத்தின் வழியேதான்; கைது செய்யப்பட்டவர் எங்கே உள்ளார், உயிருடன் உள்ளாரா, இறந்தாரா என்பதற்கான பதிலை குடும்பங்கள் பெற வேண்டும் என்பதே கட்டுரையின் வலியுறுத்தல்.

## 2008/2009 காணாமல் போனவர்களும் இதே கேள்வி

2008-2009 காலப்பகுதியிலும் பலர் சரணடைந்ததும், காவலில் இருந்ததும் காட்சிகள் மற்றும் ஆவணங்களில் பதிவு செய்யப்பட்டதாக கட்டுரை சுட்டிக்காட்டுகிறது. ஆனால் பின்னர் அவர்களின் நிலை குறித்து தெளிவான பதில்கள் கிடைக்கவில்லை என கூறப்படுகிறது.

முன்னாள் வடமாகாண அமைச்சர் Ananthy Sasitharan தனது கணவர் கைது செய்யப்பட்ட பின்னர் காணாமல் போன விவகாரத்தில் தொடர்ந்து பதில் கோரி வருவதாகவும் குறிப்பிடப்படுகிறது.

## Aragalaya-க்கு ஒரு அணுகுமுறை, காணாமல் போனவர்களின் போராட்டத்திற்கு வேறொன்றா?

கட்டுரையில் இன்னொரு முக்கியமான ஒப்பீடு முன்வைக்கப்படுகிறது. Sri Lanka-வில் Aragalaya போராட்டத்திற்கு அரசியல் மாற்றத்தையே ஏற்படுத்தும் அளவுக்கு இடம் கிடைத்தபோதும், காணாமல் போனவர்களின் குடும்பங்களின் போராட்டம் அதே அளவிலான அங்கீகாரத்தையும் மரியாதையையும் பெறவில்லை என ஆசிரியர் விமர்சிக்கிறார்.

அவர்களின் கேள்வி மிகவும் எளிமையானது:

"எங்கள் உறவுகள் எங்கே?"

புதைகுழிகள் பற்றிய தொழில்நுட்ப ஆய்வு வேண்டுமா?

கட்டுரை ஒரு நடைமுறை முன்மொழிவையும் முன்வைக்கிறது. காணாமல் போனவர்கள் கடைசியாக காணப்பட்டதாகக் கூறப்படும் Paper Factory Camp மற்றும் Navalady Army Post பகுதிகளை நவீன தொழில்நுட்பங்களின் உதவியுடன் ஆய்வு செய்ய வேண்டும் என்று ஆசிரியர் கருத்து தெரிவிக்கிறார்.

மேற்பரப்பிலிருந்தும் வான்வழியிலிருந்தும் பெரிய புதைப்பகுதிகளை கண்டறிய உதவும் நவீன தொழில்நுட்பங்கள் உள்ளதால், அரசு அதை மேற்கொள்ளாவிட்டால் diaspora சமூகமும் தொழில்நுட்ப மற்றும் நிதி உதவிகளை வழங்க முடியும் என அவர் முன்வைக்கிறார்.

இது ஒரு உறுதிப்படுத்தப்பட்ட புதைகுழி குறித்த ஆதாரம் அல்ல; மாறாக மேலும் விசாரணை செய்ய வேண்டிய கோரிக்கை என்ற வகையில் கட்டுரையில் முன்வைக்கப்படுகிறது.

36 ஆண்டுகள் கடந்தும் ஒரே கேள்வி

கட்டுரையின் இறுதி செய்தி மிகவும் தெளிவானது:

காணாமல் போனவர்களின் குடும்பங்கள் மறக்கவில்லை. பதில் கிடைக்கும் வரை அவர்கள் காத்திருப்பார்கள். உண்மை ஒருநாள் வெளிவரும் என்ற நம்பிக்கையே அவர்களின் போராட்டத்தின் அடிப்படை

# யாழ்ப்பாணத்தின் சுற்றுலா வெற்றி பொதுச் சுகாதார நெருக்கடியாக மாறக்கூடாது




**ராஜ் சிவநாதன் - மெல்பேர்ன், அவுஸ்திரேலியா**



**தூய நீர், பாதுகாப்பான சுகாதாரம் மற்றும் சுத்தமான நகரம் ஆகியவை வட மாகாணத்தின் எதிர்காலத்திற்கான அடிப்படை முதலீடுகளாகும்.**

நல்லூர் திருவிழா யாழ்ப்பாணத்தின் பண்பாட்டு மற்றும் பொருளாதார வலிமையை வெளிப்படுத்துகிறது. இந்த வெற்றிக்கு இணையாக கழிவுநீர், வடிகால், மலசலகூடங்கள், குப்பை சேகரிப்பு மற்றும் நிலத்தடி நீர்ப் பாதுகாப்பு ஆகியவற்றில் அவசர முன்னேற்றம் ஏற்பட வேண்டும்.

**பண்பாட்டையும் பொருளாதார வாய்ப்பையும் கொண்ட திருவிழா**

வருடாந்த நல்லூர் கந்தசுவாமி ஆலயத் திருவிழா இலங்கையின் மிக முக்கியமான சமய மற்றும் பண்பாட்டு நிகழ்வுகளில் ஒன்றாகத் தொடர்கிறது. ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் மாதங்களில் உலகெங்குமிருந்து ஆயிரக்கணக்கான பக்தர்கள், உள்நாட்டு சுற்றுலாப் பயணிகள் மற்றும் புலம்பெயர் தமிழர்கள் யாழ்ப்பாணத்திற்கு வருகை தருகின்றனர்.

இந்த வருகை வட மாகாணத்துக்கு கணிசமான பொருளாதார நன்மைகளை வழங்குகிறது. விடுதிகள், விருந்தினர் இல்லங்கள், உணவகங்கள், போக்குவரத்து நிறுவனங்கள், சில்லறை வணிகர்கள் மற்றும் சிறு வணிகங்கள் இதனால் பயனடைகின்றன. சமய மற்றும்



பண்பாட்டுச் சுற்றுலா யாழ்ப்பாணத்தின் எதிர்கால பொருளாதார வளர்ச்சிக்கு வழங்கக்கூடிய பெரும் வாய்ப்பையும் இது எடுத்துக்காட்டுகிறது.

ஆனால் சமீபத்திய திருவிழாப் பருவம் நகரத்தின் அடிப்படை உட்கட்டமைப்பிலுள்ள கடுமையான குறைபாடுகளையும் வெளிப்படுத்தியுள்ளது. பல விடுதிகளும் தங்குமிடங்களும் முழுக் கொள்ளளவிற்கு அருகில் இயங்கியதாகக் கூறப்பட்ட அதேவேளையில், தெருக்களின் அசுத்தம், போதாமையான பொதுமலசலகூடங்கள், அடைப்பட்ட மற்றும் மாசடைந்த வடிகால்கள், ஒழுங்கற்ற குப்பை சேகரிப்பு மற்றும் தவறான கழிவுநீர் வெளியேற்றம் குறித்து பார்வையாளர்களும் புலம்பெயர் மக்களும் பல முறைப்பாடுகளை முன்வைத்தனர்.

இவை சுற்றுலாப் பயணிகளின் சிறிய குறைகளாகப் புறக்கணிக்கப்படக் கூடாது. ஒரு தீவிர சுற்றுச்சூழல் மற்றும் பொதுச் சுகாதார நெருக்கடி உருவாகக்கூடும் என்பதற்கான எச்சரிக்கைகளாகக் கருதப்பட வேண்டும்.

## யாழ்ப்பாணத்தின் நிலத்தடி நீர் ஆபத்தில் உள்ளது

பல பிராந்தியங்களைப் போல யாழ்ப்பாணக் குடாநாட்டில் பெருமளவு ஆறுகள் அல்லது மேற்பரப்பு நீர்வளங்கள் இல்லை. குடிநீர், சமையல், வீட்டுத் தேவைகள் மற்றும் விவசாயத்திற்கு பெரும்பாலான மக்கள் தொடர்ந்தும் நிலத்தடி நீரையே சார்ந்துள்ளனர்.

இந்த நீர் ஆழமற்ற சுண்ணாம்புக்கல் நீர்ப்படுகையில் சேமிக்கப்படுவதால் எளிதில் மாசடையக்கூடியது. பெரும்பாலான வீடுகள், விடுதிகள், உணவகங்கள் மற்றும் வணிகக் கட்டிடங்கள் மையப்படுத்தப்பட்ட கழிவுநீர் வலையமைப்புடன் இணைக்கப்படவில்லை. அவை கழிவுத்தொட்டிகள், உறிஞ்சுக் குழிகள், மூடிய குழிகள் அல்லது சில இடங்களில் போதாமையாக அமைக்கப்பட்ட திறந்த முறைகளைச் சார்ந்துள்ளன.

கிணறுகளும் கழிவுநீர் அகற்றும் அமைப்புகளும் சிறிய, நெருக்கமான காணிகளில் ஒன்றுக்கொன்று மிக அருகில் அமைந்திருந்தால் மனிதக் கழிவுகள் நிலத்தடி நீருக்குள் ஊடுருவக்கூடும். தவறாகக் கட்டப்பட்ட அல்லது நிரம்பிவழியும் கழிவுத்தொட்டிகள் இன்னும் பெரிய ஆபத்தை ஏற்படுத்துகின்றன.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட அறிவியல் ஆய்வுகள் சில கிணறு மாதிரிகளில் நைட்ரேட் மற்றும் பாக்டீரியா மாசுபாட்டை அடையாளம் கண்டுள்ளன. மழைநீர் வடிகால்கள், கால்வாய்கள் மற்றும் நிலத்தடி நீர் மீள்நிரப்பு குளங்களுக்குள் கழிவுநீர் செல்வது குறித்தும் ஆய்வாளர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இதனால் யாழ்ப்பாணத்தின் ஒவ்வொரு கிணறும் மாசடைந்துள்ளது என்று கூற முடியாது. ஆனால் ஆபத்து உண்மையானது



என்பதையும் அவசரமான சுயாதீன நீர்தரப் பரிசோதனை தேவை என்பதையும் இது தெளிவுபடுத்துகிறது. நிலத்தடி நீர்ப்படுகை பரவலாக மாசடைந்த பின்னர் அதை மீட்டெடுப்பது மிகவும் கடினமானதும் செலவானதும் சில நேரங்களில் சாத்தியமற்றதுமாகும். பின்னர் சரிசெய்வதைவிட மாசுபாட்டைத் தடுப்பதே சிறந்தது.

சுகாதாரமின்றி சுற்றுலா வளர முடியாது

யாழ்ப்பாணம் சமய, பண்பாட்டு, மரபுரிமை, நலவாழ்வு மற்றும் புலம்பெயர் சுற்றுலாவுக்கான முக்கிய தலமாக வளரக்கூடிய மிகப்பெரிய வாய்ப்பைக் கொண்டுள்ளது. நல்லூர், யாழ்ப்பாணக் கோட்டை, பொதுநூலகம், கீரிமலை, கசூரினா கடற்கரை, நயினாதீவு, நெடுந்தீவு மற்றும் பிராந்தியத்தின் தனித்துவமான உணவு-பண்பாட்டு மரபுகள் ஆண்டு முழுவதும் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கக்கூடியவை.

விடுதிகள், திருவிழாக்கள் மற்றும் விளம்பர நடவடிக்கைகள் மட்டுமே வெற்றிகரமான சுற்றுலா வளர்ச்சியை உருவாக்காது. சுத்தமான தெருக்கள், பாதுகாப்பான குடிநீர், சுகாதாரமான உணவு, முறையாகப் பராமரிக்கப்படும் மலசலகூடங்கள், திறமையான குப்பை சேகரிப்பு மற்றும் ஆரோக்கியமான சுற்றுச்சூழல் ஆகியவற்றையும் பார்வையாளர்கள் எதிர்பார்க்கின்றனர்.

பயணிகள் சுகாதாரமற்ற நிலை குறித்த முறைப்பாடுகளுடன் திரும்பிச் செல்லும்போது அதன் பாதிப்பு ஒரு விடுதி அல்லது ஒரு உள்ளூராட்சி அமைப்புடன் முடிவதில்லை. முழு வட மாகாணத்தின் நற்பெயரையும் அது பாதிக்கிறது.

புலம்பெயர் தமிழர்கள் யாழ்ப்பாணத்துடன் ஆழமான உணர்வுபூர்வமான பிணைப்பைக் கொண்டுள்ளனர். ஆனால் அந்த உறவை எளிதாக எடுத்துக்கொள்ளக் கூடாது. அவர்கள் முதலீட்டாளர்கள், நன்கொடையாளர்கள், வணிகப் பங்காளர்கள் மற்றும் பிராந்தியத்தின் சர்வதேச தூதுவர்களாகவும் இருக்க முடியும். அவர்களுடைய கவலைகள் ஆக்கபூர்வமாகக் கேட்கப்பட்டு தீர்க்கப்பட வேண்டும்.

## மாநகர முதல்வரும் மாநகர சபையும் ஏற்க வேண்டிய உடனடிப் பொறுப்பு

யாழ்ப்பாண மாநகர முதல்வரும் மாநகர சபையும் இதனை அவசர பொதுச் சுகாதார மற்றும் நகர நிர்வாக முன்னுரிமையாகக் கருத வேண்டும். யாழ்ப்பாண பேருந்து நிலையம், சந்தைகள், போதனா வைத்தியசாலைச் சுற்றுப்பகுதி, நல்லூர் திருவிழா வலயம், பொதுமலசலகூடங்கள், அடைப்பட்ட வடிகால்கள், மாநகரக் குளங்கள் மற்றும் கழிவுநீர் வெளியேற்றப்படுவதாகக் கூறப்படும் இடங்கள் உடனடியாக ஆய்வு செய்யப்பட வேண்டும்.

மக்கள் அதிகமாகப் பயன்படுத்தும் பகுதிகளில் குப்பை சேகரிப்பு, தெருச் சுத்தம், வடிகால் தூர்வாரல் மற்றும் பொதுமலசலகூட



பராமரிப்பு தீவிரப்படுத்தப்பட வேண்டும். விடுதிகள், விருந்தினர் இல்லங்கள், உணவகங்கள், திருமண மண்டபங்கள் மற்றும் அதிக மக்கள் தங்கும் கட்டிடங்கள் பாதுகாப்பான நீரும் முறையாகச் செயல்படும் கழிவுநீர் அமைப்பும் உள்ளதைக் காட்ட வேண்டும். கழிவுத்தொட்டிகளில் இருந்து அகற்றப்படும் கழிவுகள் பாதுகாப்பாக இறக்கப்படுவதற்கான பதிவுகளும் பராமரிக்கப்பட வேண்டும். பொது நீர்வழங்கல் இடங்கள், தெரிவுசெய்யப்பட்ட கிணறுகள், குளங்கள் மற்றும் வடிகால்கள் பாக்டீரியா, நைட்ரேட், உவர்ப்பு மற்றும் பிற தொடர்புடைய அளவுகோல்களுக்கு சுயாதீன அதிகாரிகளால் பரிசோதிக்கப்பட வேண்டும். முடிவுகளும் பொதுச் சுகாதார ஆலோசனைகளும் தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கிலத்தில் உடனடியாக வெளியிடப்பட வேண்டும்.

கழிவுநீர் பெருக்கு, சட்டவிரோத குப்பைக் கொட்டல், அடைப்பட்ட வடிகால்கள், பாதுகாப்பற்ற மலசலகூடங்கள் மற்றும் சேகரிக்கப்படாத குப்பைகளை மக்கள் அறிவிக்க ஒரு பொதுமுறைப்பாட்டு தொலைபேசி இலக்கத்தை மாநகர சபை உருவாக்க வேண்டும். ஒவ்வொரு முறைப்பாட்டுக்கும் குறிப்பு இலக்கமும் குறிப்பிட்ட காலத்திற்குள் பதிலும் வழங்கப்பட வேண்டும்.

## தமிழ் அரசியல் கட்சிகள் ஒன்றிணைய வேண்டும்

இந்த விடயம் இன்னுமொரு கட்சி அரசியல் போட்டியாக மாறக்கூடாது. இலங்கைத் தமிழரசுக் கட்சி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி, ஈ.பி.டி.பி., தேசிய மக்கள் சக்தி பிரதிநிதிகள் மற்றும் பிற அரசியல் குழுக்கள் யாழ்ப்பாணத்தின் நீரைப் பாதுகாத்து சுகாதாரத்தை மேம்படுத்தும் பொதுத் திட்டத்தில் இணக்கம் காண வேண்டும்.

நீர், கழிவுநீர், வடிகால் மற்றும் குப்பை சேகரிப்பு ஒவ்வொரு குடும்பத்தையும் அரசியல் வேறுபாடின்றி பாதிக்கின்றன. தமிழ் கட்சிகள் அரசியல் உரிமைகள், பொருளாதார வளர்ச்சி மற்றும் வட மாகாணத்தின் எதிர்காலம் குறித்து அடிக்கடி பேசுகின்றன. மக்களின் குடிநீரையும் சுகாதாரத்தையும் பாதுகாப்பதும் ஓர் அடிப்படை உரிமையாகவும் அரசியல் தலைமையின் அத்தியாவசிய கடமையாகவும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

யாழ்ப்பாண நீர்வழங்கல் மற்றும் கழிவுநீர் திட்டங்களின் தற்போதைய நிலை குறித்து அரசாங்கமும் தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையும் தெளிவான அறிக்கை வழங்குமாறு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றிணைந்து கோர



வேண்டும். எந்தக் கூறுகள் நிறைவடைந்துள்ளன, எவை செயற்பாட்டில் உள்ளன, எவை தாமதமாகியுள்ளன, எத்தனை வீடுகள் இணைக்கப்படும், எவ்வளவு நிதி உள்ளது, முழுமையான கழிவுநீர் அமைப்பு எப்போது செயற்படும் என்பன மக்களுக்குத் தெரிவிக்கப்பட வேண்டும்.

## அடுத்த நல்லூர் திருவிழாவுக்கு முன்னரே திட்டம் தேவை

அடுத்த நல்லூர் திருவிழாவிற்கான தயாரிப்புகள் நிகழ்வுக்கு சில வாரங்களுக்கு முன் அல்லாது இப்போதே ஆரம்பிக்கப்பட வேண்டும். திட்டத்தில் பின்வரும் விடயங்கள் இடம்பெற வேண்டும்:

- பெண்கள், முதியோர் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான வசதிகள் உட்பட போதுமான தற்காலிக மற்றும் நிரந்தர மலசலகூடங்கள்.
- பாதுகாப்பான நீருடன் கை கழுவும் நிலையங்களும் தொடர்ச்சியான சுத்தப்படுத்தலும்.
- திட்டமிட்ட கழிவுத்தொட்டி அகற்றலும் சேகரிக்கப்பட்ட கழிவுகளின் பாதுகாப்பான இறக்கமும்.
- கூடுதல் மூடிய குப்பைத்தொட்டிகளும் அடிக்கடி நடைபெறும் குப்பை சேகரிப்பும்.
- விடுதிகள், உணவகங்கள் மற்றும் தெரு உணவு விற்பனையாளர்களுக்கான உணவுப் பாதுகாப்பு மற்றும் குடிநீர் ஆய்வுகள்.
- முக்கிய ஊர்வலங்களுக்கு முன், நிகழ்வின்போது மற்றும் உடனடியாகப் பின்னர் பணிபுரியும் சுத்திகரிப்புக் குழுக்கள்.
- மலசலகூட இடங்கள், போக்குவரத்து ஏற்பாடுகள், அவசர தொடர்புகள் மற்றும் முறைப்பாட்டு நடைமுறைகள் குறித்த பொதுத் தகவல்.
- திருவிழாவுக்கு முன், திருவிழாக் காலத்தில் மற்றும் பின்னர் நீர்தரப் பரிசோதனை.

திருவிழா முடிந்த பின்னர் வருகையாளர் எண்ணிக்கை, தங்குமிடக் கொள்ளளவு, சேகரிக்கப்பட்ட குப்பை, நடத்தப்பட்ட ஆய்வுகள், பெறப்பட்ட முறைப்பாடுகள் மற்றும் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்த பொதுஅறிக்கை வெளியிடப்பட வேண்டும்.

## கவலையிலிருந்து அளவிடக்கூடிய நடவடிக்கைக்கு

முடிவுகள் இல்லாமல் கூடும் இன்னுமொரு குழு யாழ்ப்பாணத்துக்குத் தேவையில்லை. நீர், சுகாதாரம் மற்றும் தூய நகரப் பணிக்குழுவில் பெயரிடப்பட்ட அதிகாரிகள், வெளியிடப்பட்ட பொறுப்புகள், வரவு-செலவுகள், காலக்கெடுகள் மற்றும் அளவிடக்கூடிய இலக்குகள் இருக்க வேண்டும்.



ஆரம்ப அவசர காலத்தில் மாதந்தோறும், பின்னர் குறைந்தபட்சம் மூன்று மாதங்களுக்கு ஒருமுறையும் முன்னேற்றம் பொதுமக்களுக்கு அறிவிக்கப்பட வேண்டும்.

நீண்டகாலத் தீர்வாக மிக அடர்த்தியான மற்றும் வணிகச் செயற்பாடு நிறைந்த பகுதிகளுக்கான முறையான பொறியியல் கழிவுநீர் வலையமைப்பு அமைக்கப்பட வேண்டும். வைத்தியசாலைச் சுற்று, பேருந்து நிலையம், சந்தைகள், நல்லூர், நகர மையம் மற்றும் முக்கிய தங்குமிட வழித்தடங்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.

மைய வலையமைப்பை உடனடியாக நீட்டிக்க முடியாத இடங்களில் முறையாக வடிவமைக்கப்பட்ட பகிர்ந்தளிக்கப்பட்ட கழிவுநீர் சுத்திகரிப்பு அமைப்புகளைப் பரிசீலிக்கலாம். அவற்றுக்கு பயிற்சிபெற்ற இயக்குநர்கள், தொடர்ச்சியான பராமரிப்பு, அறிவியல் கண்காணிப்பு மற்றும் உறுதியான நீண்டகால நிதி அவசியம்.

## யாழ்ப்பாணத்தைப் பாதுகாப்பது அனைவரதும் பொறுப்பு

நல்லூர் திருவிழாவின் வெற்றி தமிழ் மக்களின் பண்பாட்டு வலிமையையும் உலகத் தமிழ் புலம்பெயர் சமூகத்தின் யாழ்ப்பாணத்துடனான தொடர்ந்த பிணைப்பையும் வெளிப்படுத்துகிறது.

ஆனால் போதுமான சுகாதார வசதிகள் இல்லாமல் அதிகரிக்கும் வருகையாளர்கள் நாம் கொண்டாடி அபிவிருத்தி செய்ய விரும்பும் நகரத்தையே பாதிக்கலாம். அசுத்தமான தெருக்கள் பொதுநம்பிக்கையைப் பாதிக்கும். தவறான குப்பை நிர்வாகம் வணிகங்களையும் சுற்றுச்சூழலையும் சேதப்படுத்தும். வடிகால்களிலும் குளங்களிலும் செல்லும் கழிவுநீர் நோய்ப்பரவல் ஆபத்தை ஏற்படுத்தும். நிலத்தடி நீர் மாசுபாடு எதிர்காலத் தலைமுறைகளையே அச்சுறுத்தும்.

மாநகர முதல்வர், மாநகர சபை, தமிழ் அரசியல் கட்சிகள், அரசாங்கத் திணைக்களங்கள், வணிக நிறுவனங்கள், ஆலய நிர்வாகங்கள், தொழில்நுட்ப நிபுணர்கள் மற்றும் சிவில் சமூகம் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும்.

யாழ்ப்பாணத்தின் நீரையும் பொதுச் சுகாதாரத்தையும் பாதுகாப்பது மாநகரக் கடமை மட்டுமல்ல. அது அவசரமான தேசியப் பொறுப்பும் வட மாகாணத்தின் எதிர்காலத்திற்கான அடிப்படை முதலீடும் ஆகும்.




# தோல்விகளைத் தாண்டி புதிய சாதனை: சுவிட்சர்லாந்துத் தமிழ் தொழில்முனைவோர் கண்டி தமிழ்ச்செல்வன்




## முதலீட்டு நிகழ்ச்சியில் CHF 200,000 பெற்றது முதல் Instagram, TikTok-க்கு மாற்றான புதிய சமூக ஊடகத் தளத்தை உருவாக்குவது வரை தொடரும் பயணம்

40 வயதான கண்டி தமிழ்ச்செல்வன், சுவிட்சர்லாந்தின் ஷ்வீஸ் (Schwyz) மாநிலத்தைச் சேர்ந்த ஸ்டார்ட்அப் நிறுவுநரும் தொழில்முனைவோருமாவார்.

சுவிட்சர்லாந்தின் பிரபல முதலீட்டுத் தொலைக்காட்சி நிகழ்ச்சியான «Die Höhle der Löwen Schweiz» நிகழ்ச்சியில் பங்கேற்றதன் மூலம் அவர் பரவலாக அறியப்பட்டார். அந்த நிகழ்ச்சியில் பங்கேற்ற முதல் தமிழ் வம்சாவளியைச் சேர்ந்த நிறுவுநராகக் கருதப்படும் அவர், தனது Wachmeister பிராண்டின் மூலம் மூன்று முதலீட்டாளர்களைக் கவர்ந்து, CHF 200,000 முதலீட்டைப் பெற்றார்.

### காபிக்கான மாற்றுத் தயாரிப்புகள்

Wachmeister காஃபின் சூயிங் கம் மற்றும் காஃபின் மிட்டாய்கள் அவரது பிரபலமான தயாரிப்புகளாகும். காபி மற்றும் பாரம்பரிய எனர்ஜி பானங்களுக்கு மாற்றாக, எளிதாக எடுத்துச் சென்று பயன்படுத்தக்கூடிய வகையில் இவை உருவாக்கப்பட்டுள்ளன.

இன்று Wachmeister தனது விற்பனை வலையமைப்பை குறிப்பிடத்தக்க அளவில் விரிவுபடுத்தியுள்ளது. Coop Pronto, Müller, Spar, Edeka, Rewe மற்றும் Tegut போன்ற விற்பனை நிலையங்களிலும், சுமார் 300 தானியங்கி விற்பனை இயந்திரங்கள் மற்றும் பல கியோஸ்க்



கடைகளிலும் அதன் தயாரிப்புகள் கிடைக்கின்றன. இதன்மூலம் சுவிட்சர்லாந்து, ஜெர்மனி மற்றும் ஆஸ்திரியாவில் இந்தப் பிராண்ட் தனது சந்தை இருப்பை உருவாக்கியுள்ளது.

## கொரோனா காலத்தில் கிடைத்த அறிமுகம்

கொரோனா பெருந்தொற்றுக் காலத்தில் கண்டி தமிழ்ச்செல்வன் அறிமுகப்படுத்திய Paido Soda என்ற பானம், அவருக்கு தொழில்முனைவோர் உலகில் கூடுதல் கவனத்தையும் அறிமுகத்தையும் பெற்றுத் தந்தது. எனினும், அவரது தொழில்முனைவுப் பயணம் வெற்றிகளால் மட்டுமே நிரம்பியிருக்கவில்லை. கடந்த சில ஆண்டுகளில் வெற்றிகளுடன் தோல்விகள், கடினமான காலகட்டங்கள் மற்றும் எதிர்பாராத பின்னடைவுகளையும் அவர் சந்தித்துள்ளார்.

## பிரச்சினைகளிலிருந்து பிறந்த புதிய சிந்தனைகள்

தான் சந்தித்த சவால்களிலிருந்தே அதிகமாகக் கற்றுக்கொண்டதாக தமிழ்ச்செல்வன் கூறுகிறார். பிரச்சினைகளை வெறும் தடைகளாகப் பார்க்காமல், அவற்றுக்கான தீர்வுகளைக் கண்டறிவதே அவரது அணுகுமுறையாக மாறியுள்ளது.

பின்னடைவுகளை அனுபவங்களாகவும், பிரச்சினைகளைப் புதிய யோசனை களுக்கான வாய்ப்புகளாகவும் மாற்றிக்கொள்ளும் திறன் இன்று அவரது முக்கிய பலங்களில் ஒன்றாக உள்ளது.

## புதிய தொழில்முனைவோருக்கு வழிகாட்டல்

தான் பெற்ற அனுபவங்களை மற்றவர்களுடன் பகிர்ந்துகொண்டு, சுயதொழில் மற்றும் தொழில்முனைவுத் துறைக்குள் நுழைய விரும்புபவர்களுக்கு உதவுவதையும் அவர் தனது நோக்கமாகக் கொண்டுள்ளார்.

பயிற்சிகள், சமூக ஊடகப் பதிவுகள், நடைமுறை ஆலோசனைகள் மற்றும் ஊக்கமளிக்கும் உள்ளடக்கங்கள் மூலம் வருங்காலத் தொழில்முனைவோருக்கு வழிகாட்டி வருகிறார். வெற்றிகளை



# Löwen überzeugt: Wachmeister findet Investoren

Kandy Thamilchevan präsentierte gestern Abend seinen Koffein Kaugummi in der TV-Sendung «Die Höhle der Löwen Schweiz» und fand einige Investorinnen und Investoren.

**Ambra Moro**

Kandy Thamilchevan hat sein Traumprodukt gefunden und erfunden – ein Kaugummi mit Koffein. Er soll in nur fünf bis zehn Minuten wach machen, die Wirkung über längere Zeit halten, flexibel dosierbar und in der Hosentasche überall hin transportierbar sein. «Der «fresh mint» Kaugummi verkauft sich bereits jetzt wie warme Semmel», meint der Start-up-Unternehmer und ist in Schweizer Läden wie Coop Pronto, Müller oder Spar erhältlich. «Doch Wachstum kostet Geld», wie er es richtig ausdrückt, weshalb er nun seine Marke Wachmeister, mit Sitz in Wollerau, fünf Investorinnen und Investoren bei «Die Höhle der Löwen Schweiz» vorstellt. Mit der Hoffnung, seinen Wachmeister mithilfe der Löwen noch besser und schneller wachsen zu lassen. Als Glücksbringer hat Kandy Thamilchevan den farbenfrohen Gorilla «Mr. Wachmeister» von seinem Eyecatcher-Logo mitgebracht.

«Jetzt gilt alles oder Nichts», motiviert sich der Einsiedler, bevor er vor die wachen Löwen tritt. Selbstverständlich lässt er sie sein Produkt selbst kosten. «Der Kaugummi hat einen angenehmen frischen Geschmack», lobt Software-Unternehmerin Bettina Hein. Auch die anderen Löwen können ihr nur zustimmen. «Er hat eine harte Schale, aber innendrin ist er ganz weich. Das finde ich gut», fügt Online-Händler Roland Brack hinzu. «Ich hoffe, ich kann dann in der Nacht noch schlafen», witzelte die Jury weiter.




Kandy Thamilchevan findet bei «Die Höhle der Löwen» gleich drei Investoren. Eine davon ist Bettina Hein (oben links) 3+

«So etwas habe ich bei <Die Höhle der Löwen> noch nie erlebt.»

### Kampf unter den Löwen

Schliesslich macht Kandy Thamilchevan den Geldgebern ein Angebot: 100 000 CHF für 5% Firmenanteil. Bettina Hein und Dermatologe Dr. Felix Bertram stellen Kandy Thamilchevan sofort ein Gegenangebot: Sie wollen ihm die 100 000 geben, wollen jedoch 8% Firmenanteil. Aber auch Unternehmer Lukas Speiser möchte den Wachmeister für sich gewinnen. «Ich glaube, dass du mit mir besser fährst», behauptet der Amorana-Mitgründer, fordert aber glatte 10 Prozent. Dies löst ein regelrechter Streit zwischen den Löwen aus. «So etwas habe ich bei <Die Höhle der Löwen> noch nie erlebt», meint Thamilchevan und gesteht den Löwen, dass er gerne einen Deal mit allen drei hätte. Nach einem angeregten Schlagabtausch einigen sich die Investorin und die beiden Investoren auf einen gemeinsamen Deal: 200 000 für 19Prozent. Zusätzlich nimmt Roland Brack den «fresh mint» Kaugummi in sein Sortiment bei Brack auf, was den Wachmeister-Gründer sehr freut.

«Besser hätte es nicht laufen können», meint Kandy Thamilchevan. Für ihn war die Chance bei «Die Höhle der Löwen Schweiz» ein voller Erfolg und eine unglaubliche Erfahrung.«Ich kann jedem Start-up, welches eine Plattform und Werbung braucht, empfehlen, sich bei dieser TV-Sendung anzumelden.»

மட்டும் முன்னிறுத்தாமல், தோல்விகள், தவறுகள், சவால்கள் மற்றும் விடாமுயற்சியின் அவசியத்தையும் வெளிப்படையாகப் பகிர்ந்து வருகிறார்.

**Instagram, TikTok-க்கு மாற்றாக Pickeed**

தனது அடுத்த பெரிய முயற்சியாக Pickeed என்ற புதிய சமூக ஊடகத் தளத்தை கண்டி தமிழ்ச்செல்வன் உருவாக்கி வருகிறார்.

Instagram மற்றும் TikTok போன்ற முன்னணி சமூக ஊடகத் தளங்களுக்கு மாற்றான புதிய தளமாக Pickeed-ஐ வளர்த்தெடுப்பதே அவரது இலக்காகும். தற்போது அதன் உருவாக்கம் மற்றும் அறிமுகப் பணிகள் நடைபெற்று வருகின்றன. ஆர்வமுள்ளவர்கள் தளம் அதிகாரப்பூர்வமாக அறிமுகமாவதற்கு முன்பே www.pickeed.com இணையதளத்தில் பதிவுசெய்துகொள்ளலாம்.

**கண்டி தமிழ்ச்செல்வனின் பயணம் ஒரு தெளிவான செய்தியை வழங்குகிறது:**

“தொழில்முனைவு என்பது வெற்றிகளை மட்டுமே கொண்ட பாதையல்ல; தோல்விகளிலிருந்து கற்றுக்கொண்டு மீண்டும் முன்னேறுவதற்கான துணிச்சலே உண்மையான வெற்றி.”




# லண்டனில் நடைபெற்ற கறுப்பு யூலை நினைவேந்தல் நிகழ்வு

1983 ஆம் ஆண்டு யூலை மாதம் சிறி லங்கா அரசி னாலும்,ஒட்டுக்குழுக்களாலும் ஈழத்தமிழருக்கெதிராக மேற்கொள்ளப்பட்ட இனவழிப்பு சம்பவத்தில் படுகொலை செய்யப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட மக்களுக்காக லண்டனில் உள்ள இலங்கை உயர்ஸ்தானி காரியாலயத்திற்கு முன்பாக (13 Hyde park gardens Tyburni-a,London W2 2LU)லண்டனில் உள்ள அமைப்புக்கள் சேர்ந்து கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை நடாத்தியிருந்தனர்.



# சபையில் கைது குறித்து வாய் திறக்காத நாமல் ராஜபக்ஷ!

## அநுரவை சாடி சரமாரி உரை




சிறைக்காவலர்களின் பாதுகாப்புடன் (08) நாடாளுமன்றக் கூட்டத்தொடரில் கலந்துகொண்டு உரையாற்றி நாமல் ராஜபக்ஷ, தமது கைது அல்லது நிலுவையில் உள்ள வழக்குகள் தொடர்பில் எவ்வித கருத்தையும் முன்வைக்காது , நாட்டின் பொருளாதார நெருக்கடி, விவசாயிகளின் பிரச்சினைகள் மற்றும் அரசாங்கத்தின் நிர்வாகச் செயற்பாடுகள் குறித்து தனது விமர்சனங்களை முன்வைத்தார்.

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் (SLPP) நாடாளுமன்ற உறுப்பினர் நமால் ராஜபக்ஷ, சிறைக்காவலர்களின் பாதுகாப்புடன் இன்று (08) நாடாளுமன்றக் கூட்டத்தொடரில் கலந்துகொண்டு உரையாற்றினார்.

இதன்போது, தற்போதைய அரசாங்கத்தின் தேர்தல் வாக்குறுதிகள், பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் நிர்வாக நடவடிக்கைகளை அவர் கடுமையாக விமர்சித்தார்.

அரசாங்கத்தின் ஆட்சிக்காலத்தில் சுங்கத்துறை மூலம் அதிகளவு வருமானம் கிடைத்துள்ளதாக பெருமை பேசப்படுவதாகக் குறிப்பிட்ட அவர், சட்டவிரோதமாக விடுவிக்கப்பட்டதாகக் கூறப்படும் 323 கொள்கலன்கள் ஊடாகவே இந்த வருமானம் கிடைத்ததாக குற்றஞ்சாட்டினார்.

மேலும், தேர்தல் காலத்தில் வழங்கப்பட்ட எந்தவொரு முக்கிய வாக்குறுதியும் நிறைவேற்றப்படவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

விவசாயிகளுக்கு ஒரு கிலோ நெல்லுக்கு 150 ரூபாய் வழங்கப்படும் என தேர்தலுக்கு முன்னர் உறுதியளித்தவர்கள், தற்போது விவசாயிகளை கைவிட்டுள்ளதாகவும் நமால் ராஜபக்ஷ சுட்டிக்காட்டினார்.

தற்போது ஈர நெல் கிலோ 80 முதல் 85 ரூபாய் வரையிலும், உலர் நெல் கிலோ 90 முதல் 95 ரூபாய் வரையிலும் விற்பனை செய்யப்படுவதாகவும், அரசாங்கம் உரிய முறையில் நெல்லைக் கொள்முதல் செய்யவில்லை என்றும் அவர் குற்றஞ்சாட்டினார்.

அதேவேளை, வெளிநாடுகளில் இருந்து 4 இலட்சம் மெட்ரிக் தொன் அரிசி இறக்குமதி செய்யப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

'எல் நினோ' மற்றும் 'தித்வா' புயல் போன்ற பாதிப்புகளுக்கு முன்னர் முறையான திட்டமிடல்கள் மேற்கொள்ளப்படாததால் விவசாயிகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

நாடு முழுவதும் 74 பிரதான நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் 34 சதவீதமாகக் குறைந்துள்ளதாகவும், பல கிராமங்களில் 20 முதல் 25 நாட்களுக்கு ஒருமுறை மாத்திரமே குடிநீர் விநியோகிக்கப்படும் நிலை காணப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

50 பல்கலைக்கழகங்களை உருவாக்குவோம்

என உறுதியளித்த அரசாங்கம், தற்போது ஒரு பாடசாலைக் கட்டிடத்தின் இரண்டாவது மாடியைக் கட்டுவதற்குக் கூட அடிக்கல் நாட்டிவிட்டு புத்தாண்டு வரை காத்திருப்பதாகவும் நமால் ராஜபக்ஷ விமர்சித்தார்.

மேலும், நாட்டில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய நிவாரணங்களை வழங்காமல் நேபாளத்திற்கு ஒரு மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்குவதாக அரசாங்கம் கூறுவது தொடர்பிலும் அவர் கேள்வி எழுப்பினார்.

இதுபோன்ற பொய் வாக்குறுதிகளை வழங்கி சர்வதேச ரீதியில் நாட்டின் நற்பெயருக்கு பாதிப்பு ஏற்படுத்த வேண்டாம் எனவும் அவர் சபாநாயகரிடம் கேட்டுக்கொண்டார்.

நோயாளிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப மருத்துவர்களை நியமிப்போம் எனக் கூறி ஆட்சிக்கு வந்த அரசாங்கம், தற்போது அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்துடன் (GMOA) முரண்பட்டு வருவதாகவும் அவர் குற்றஞ்சாட்டினார்.

இறுதியில் ஜனாதிபதி மக்களை 'கொத்தமல்லி குடித்துவிட்டு வீட்டில் இருக்குமாறு' கூறும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் நமால் ராஜபக்ஷ தெரிவித்தார்.

மக்கள் எதிர்கொள்ளும் கடுமையான வாழ்க்கைச் செலவைக் குறைப்பதற்கும், கிராமப்புற பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கும் அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் வலியுறுத்தினார்.

# 22 வது திருத்தம் நீதித்துறை மற்றும் ஊழல் ஒழிப்புக்கான முக்கிய சீர்திருத்தம்

## ஐ.நா.வில் விளக்கமளிப்பு




நீதிமன்றக் கட்டமைப்பை வலுப்படுத்துவதற்கும் ஊழலுக்கு எதிரான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கும் அவசியமான சீர்திருத்தமாகவே 22வது திருத்தம் கொண்டுவரப்பட்டதாக ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதி சுமித் தசநாயக்க தெரிவித்துள்ளார்.

ஜெனீவாவில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரில் இலங்கை தொடர்பான அறிக்கைக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதன்போது, இலங்கையின் மனித உரிமைகள் நிலைமையை சமநிலையானதும் பயனுள்ளதுமான முறையில் மதிப்பிடுமாறு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையிடம் இலங்கை கோரிக்கை விடுத்துள்ளது.

மேலும், நியாயமானதும் சமத்துவமானதுமான சமூகத்தை கட்டியெழுப்புவதற்காக இலங்கை முன்னெடுத்து வரும் தொடர்ச்சியான முயற்சிகளுக்கு சர்வதேச சமூகத்தின் ஆதரவு அவசியம் எனவும் சுமித் தசநாயக்க வலியுறுத்தியுள்ளார்.

நீதித்துறை கட்டமைப்பை மேலும் வலுப்படுத்துதல், ஊழலைக் கட்டுப்படுத்துதல் உள்ளிட்ட சீர்திருத்த நடவடிக்கைகள் நாட்டின் நல்லாட்சியை மேம்படுத்துவதில் முக்கிய பங்காற்றும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# 18 ஆண்டுகளுக்குப் பிறகு ஜெனீவாவில் மீண்டும் உரையாற்றிய இலங்கை அரசியல் தரப்பு



18 ஆண்டுகளுக்குப் பின்னர் ஜெனீவாவில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் (UNHRC) இலங்கையின் முக்கிய அரசியல் தரப்பொன்று மீண்டும் உரையாற்றியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2008ஆம் ஆண்டு சர்வதேச திட்டமிட்ட பெற்றோர் கூட்டமைப்பை (IPPF) பிரதிநிதித்துவப்படுத்தி, ஆசியா, ஐரோப்பா மற்றும் ஆபிரிக்கக் குழுக்களுடன் இணைந்து ஜெனீவா பேரவையில் கலந்துகொண்டிருந்தமை தொடர்பான நினைவுகளையும், தற்போதைய பேரவைக் கூட்டத்தொடரில் ஜெனீவாவில் செயற்பட்டு வரும் ரோஷன் மற்றும் பிரையன் ஆகியோருடன் கலந்துகொண்ட புகைப்ப டங்களையும் பகிர்ந்து இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இம்முறை மனித உரிமைகள் பேரவையில் நிகழ்த்தப்பட்ட உரை, இலங்கையின் தற்போதைய அரசியல் மற்றும் ஜனநாயக நிலைமைகளை மையமாகக் கொண்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, 22ஆவது அரசியலமைப்புத் திருத்தம், நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ உள்ளிட்டோருக்கு எதிராக முன்னெடுக்கப்படுவதாகக் கூறப்படும் அரசியல் பழிவாங்கல்கள் மற்றும் சுரேஷ் சலே உள்ளிட்டோர் தொடர்பில் ஜனாதிபதியின் உத்தரவின் கீழ் முன்னெடுக்கப்படுவதாகக் கூறப்படும் கட்டாயத் தடுத்து வைப்புகள் குறித்து சர்வதேச சமூகத்தின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், அரசாங்கத்தினால் சமூக ஊடகங்கள் ஊடாக முன்னெடுக்கப்படுவதாகக் கூறப்படும் அழுத்தங்களினால் நாட்டில் கருத்துச் சுதந்திரத்துக்கு ஏற்படும் தடைகள் குறித்தும்பேரவையில்சுட்டிக்காட்டப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2008ஆம் ஆண்டு உலகம் முழுவதிலும் உள்ள இளைஞர்களின் சுகாதார உரிமைகள் தொடர்பில் உரையாற்றியிருந்த நிலையில், தற்போது நாட்டின் பிரச்சினைகள் மாறியிருந்தாலும், தனிமனித சுதந்திரம் மற்றும் சட்டத்தின் ஆட்சி உள்ளிட்ட தாம் நீண்டகாலமாகப் போற்றிப் பாதுகாத்து வரும் தாராளமய ஜனநாயகக் கோட்பாடுகள் மற்றும் கொள்கைகளில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை என்றும் குறித்த அரசியல் தரப்பு வலியுறுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சமல் ராஜபக்ஷவிடம் 2 மணிநேரம் விசாரணை



ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸுக்கான எயார்பஸ் விமானக் கொள்வனவு தொடர்பான ஊழல் குற்றச்சாட்டுகள் குறித்து விசாரணை நடத்துவதற்காக, முன்னாள் சபாநாயகரும் முன்னாள் அமைச்சருமான சமல் ராஜபக்ஷ இன்று (08) காலை இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவில் ஆஜரானார்.

குறித்த விமானக் கொள்வனவு இடம்பெற்ற காலப்பகுதியில் நிலவிய சூழ்நிலைகள் மற்றும் அதில் இடம்பெற்றதாகக் கூறப்படும் நிதி முறைகேடுகள் தொடர்பில் வாக்குமூலம் பெறுவதற்காக அவர் ஆணைக்குழுவிற்கு அழைக்கப்பட்டிருந்தார்.

ஆணைக்குழுவின் அதிகாரிகள் அவரிடம் சுமார் இரண்டு மணித்தியாலங்களுக்கும் மேலாக விசாரணை நடத்தி வாக்குமூலம் பதிவு செய்துள்ளனர். விசாரணைகள் நிறைவடைந்ததைத் தொடர்ந்து சமல் ராஜபக்ஷ ஆணைக்குழுவிலிருந்து வெளியேறினார்.

இதேவேளை, ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் விமானக் கொள்வனவு தொடர்பான ஊழல் வழக்கில் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ அண்மையில் கைது செய்யப்பட்டு, எதிர்வரும் 18ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நிலையிலும், சிறைச்சாலை அதிகாரிகளின் பலத்த பாதுகாப்புடன் நாமல் ராஜபக்ஷ இன்று நாடாளுமன்ற அமர்வில் கலந்துகொண்டுள்ளார்.

சர்வதேச அளவில் பெரும் கவனத்தை ஏற்படுத்திய 'எயார்பஸ் ஊழல்' விவகாரம் தொடர்பில் இலங்கையில் மீண்டும் தீவிர விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதன் ஒரு பகுதியாக, அக்காலப்பகுதியில் அமைச்சரவையில் பதவி வகித்த அரசியல்வாதிகள் மற்றும் உயர் அதிகாரிகளிடம் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு வாக்குமூலங்களைப் பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இது இப்படி இருக்க அனுராதபுரத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் மக்கள் பேரணிக்கு ஐக்கிய தேசியக் கட்சி வாழ்த்து தெரிவித்துள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசத்துக்கு கடிதம் ஒன்றை அனுப்பிவைத்து, ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன இதனை தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ தலைமையில் இந்த பேரணி முன்னதாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

எனினும், அதனை சீர்குலைக்கும் நோக்கிலேயே நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ கைதுசெய்யப்பட்டதாக அந்தக் கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், இந்த கைது நடவடிக்கையால் தளராமல், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில், அநுராதபுரத்தில் நடைபெறவுள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பேரணிக்கு ஐக்கிய தேசியக் கட்சி வாழ்த்து தெரிவிப்பதாக அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.



# திருமலை கன்னியா ஆத்மயோக ஞான சபா காயத்ரி பீடத்தில் 13 ஆம் திகதி மகா கும்பாபிஷேகம்!

## சித்தரின் சூட்சும ஆசியில் எழுந்த சிவபூமியின் ஆன்மீக மகுடம்



*திருகோணமலை, கன்னியா* - ஆன்மீக பூமியான திருகோணமலையில், காயத்ரி சித்தர் முருகேசு சுவாமிகளின் சூட்சும ஆசியில் உருவான *ஆத்மயோக ஞான சபா காயத்ரி பீட ஆலயத்தின் ஏககுண்ட பக்ஷ மகா கும்பாபிஷேகம்* எதிர்வரும் 13 ஆம் திகதி காலை 9.05-10.30 வரையிலான சுபமுகூர்த்த வேளையில் வெகு விமர்சையாக நடைபெறவுள்ளது.

முதல் நாள் 12 ஆம் திகதி எண்ணெய்க் காப்பு சாத்துதல் இடம்பெறும்.

இருபத்து நான்கு ஆண்டுகால பக்தர்களின் உழைப்பும், சித்தரின் வழிகாட்டலும் ஒன்றிணைந்து உருவான இப்புண்ணிய ஆலயம், இன்று திருகோணமலை மக்களின் ஆன்மீக தாகத்தை தீர்க்கும் புனித தலமாக திகழ்கிறது.

### ஆலய வரலாறு: காட்டில் தொடங்கிய யோகம்

இந்த ஆலயத்தின் அடித்தளம் கண்டி மாவட்டம் பல்கேலக என்ற சிறு கிராமத்தில் போடப்பட்டது. அங்கு பிறந்த *காயத்ரி சித்தர் முருகேசு சுவாமிகள்* சிறு வயதிலேயே ஆன்மீக தாகம் கொண்டு இந்தியா சென்றார். அடர்ந்த காடுகளில் அலைந்து திரிந்த



சுவாமிகளை *அகஸ்திய மாமுனிவர்* ஆட்கொண்டார்.

அகஸ்தியர் ஆச்சிரமத்தில் கடும் தவம் புரிந்த சுவாமிகள், அவரின் பிரதான சீடரான *கண்ணையா யோகி மகரிஷியை* குருவாக ஏற்று, காயத்ரி உபாசனையில் சித்தி பெற்று *"காயத்ரி சித்தர்"* ஆனார்.

## இலங்கையில் காயத்ரி ஜோதி

இலங்கை திரும்பிய சுவாமிகள், "சகலரும் காயத்ரி மந்திரம் ஓதி உயர்நிலை அடைய வேண்டும்" என்ற உயர் நோக்குடன் செயற்பட்டார்.

நுவரெலியாவில் *காயத்ரி பீடம்*, மட்டக்களப்பில் *காயத்ரி வளாகம்*, தம்பிலுவிலில் *காயத்ரி தபோவனம்* ஆகியவற்றை நிறுவிய பின்னர், சிவபூமியான திருகோணமலை கன்னியாவில் *"ஆத்மயோக ஞான சபா"* பீடத்தை நிறுவ முடிவு செய்தார். 2001 ஆம் ஆண்டு ஆலயப்பணிகள் ஆரம்பிக்க திட்டமிடப்பட்ட வேளையில், *திரு. சண்முகராசா உடையார்* அவர்கள் தனது 5 ஏக்கர் காணியை தானமாக வழங்கினார். ஊர் மக்கள் அனைவரும் சாதி, மத, இன பேதமின்றி ஒன்றிணைந்து அக்காணியை துப்பரவு செய்து பணியை ஆரம்பித்தனர்.

## சூட்சும வழிகாட்டலில் உருவான ஆலயம்

சுவாமிகள் நேரில் வருகை தராவிட்டாலும், தியானத்தின் மூலம் காணியின் அமைப்பை உணர்ந்து, கையடக்கத் தொலைபேசி மூலமாக ஆலயத்தின் வடிவமைப்பு, அளவுகள், ஆகம விதிகள் அனைத்தையும் வழிகாட்டினார். அதன் அடிப்படையில் வரைபடங்கள் தயாரிக்கப்பட்டு அரச அனுமதியுடன் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

நிதிப்பற்றாக்குறை இருந்தும், பக்தர்களின் உழைப்பும் சுவாமிகளின் ஆசியும் கைகொடுக்க, ஆலயத்திற்கான கொங்கிறீட் வீதியை அரசாங்கமே அமைத்து கொடுத்தது ஒரு அதிசயமாக அமைந்தது.

## சிவலிங்க பிரதிஷ்டை: நர்மதையின் அதிசயம்

சுவாமிகள் சமாதி ஆவதற்கு முன்னர், "திருகோணமலை சிவபூமி. எனவே இங்கு சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட வேண்டும்" என ஆசீர்வதித்தார். அதன்படி, *சிவபால யோகியாரின்* கடும் தவத்தினால் நர்மதா நதிக்கரையில் தோன்றிய இரண்டு *உயிர் லிங்கங்களில்* ஒன்று இங்கும், மற்றையது நுவரெலியா *லங்காதீஸ்வரர் ஆலயத்திலும்* பிரதிஷ்டை செய்யப்பட்டது. இவ்விரண்டு லிங்கங்களையும் சுவாமிகளும் சிவபால யோகியாரும் இணைந்து பிரதிஷ்டை செய்தமை குறிப்பிடத்தக்கது.

"யான் இறுதியில் திருகோணமலையிலேயே இருப்பேன். சூட்சும வடிவில் அனைவரையும் ஆசீர்வதிப்பேன்" என்ற சுவாமிகளின் வாக்கு 2010 ஆம் ஆண்டு நடந்த முதல் கும்பாபிஷேக எண்ணெய்க் காப்பு நிகழ்வின் போது நிறைவேறியது. அன்று அந்த லிங்கத்தினுள் இருந்து சுவாமிகள் தோன்றி பக்தர்களை ஆசீர்வதித்ததை பலரும் கண்கூடாக கண்டனர். இன்றும் அந்த லிங்கப் பெருமானில் சுவாமிகளின் தரிசனம் கிடைப்பதாக பக்தர்கள் பரவசத்துடன் கூறுகின்றனர்.

## 13ஆம் திகதி: மீண்டும் ஒரு புனிதம்

இத்தகைய மகிமை பொருந்திய ஆலயத்தின் அடுத்த மகா கும்பாபிஷேகம் வரும் 13ஆம் திகதி நடைபெறவுள்ளது. யாகசாலை பூஜைகள், வேத மந்திரங்கள், காயத்ரி ஹோமங்களுடன் நடைபெறும் இவ்விழாவில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து சுவாமிகளின் அருளை பெறவுள்ளனர்.

"காயத்ரி ஜெபிப்போம். ஆத்ம ஞானம் பெறுவோம்" என்ற சுவாமிகளின் குரல் இன்றும் இப்பீடத்தில் எதிரொலிக்கிறது.


AGP Present...
Tamil Dream Night
KARTHICK DEVARAJ
& BAND
DOORS OPEN
16:30
11-10-2026
PRICE
VIP Ticket -55 CHF
Adult Ticket 16+ y -30 CHF
Child Ticket 5-16y -15 CHF
TICKETS
Arul : +41764416914
Gobi : +41789185862
Praba : +41794167696
RANIYAN
MZA PARADIESLI
Paradieslistrasse 9, 4663 Aarburg
சுவிஸ் தமிழ் TV